T. 955.

க

சிவமயம்.

# தசகாரியம்.

இது

யாழ்ப்பாணத்துத்

தெல்லிப்பழை

**வித்துவான் சிவாநந்தையரால்**

பரிசோதித்து

கந்தரோடை

நியாயப்பிரதிநிதி

**சி. பொன்னம்பலபிள்ளையால்**

கொக்குவில்

சோதிடப்பிரகாசயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

சாதாரண௵ பங்குனிமீ.

1911.

இதன்விலை அணா - ௩.

# சூசிபத்திரம்


| | பக்கம். |
|---|---|
| பாயிரம் ... ... ... ... ... | ௧ |
| தேசகாலபாத்திரவிலக்கணம் ... ... | ௪ |
| சீடலக்கணம் ... ... ... | ௬ |
| சற்குருலக்கணம் ... ... ... | ௮ |
| அசற்குருவிலக்கணம் ... ... | ௧௧ |
| ஞானதீக்ஷை ... ... ... | ௧௩ |
| தத்துவரூபம் ... ... ... | ௨௮ |
| தத்துவதரிசனம் ... ... | ௪௧ |
| தத்துவசுத்தி ... ... ... | ௫௨ |
| ஆன்மரூபம் ... ... | ௫௫ |
| ஆன்மதரிசனம் ... ... ... | ௬௦ |
| ஆன்மசுத்தி ... ... ... | ௬௩ |
| சிவரூபம் ... ... ... ... | ௬௫ |
| சிவதரிசனம் ... ... ... | ௬௮ |
| சிவயோகம் ... ... ... ... | ௭௧ |
| சிவபோகம் ... ... ... | ௭௪ |

சிவமயம்.

# தசகாரியம்.

## காப்பு.

உழிதர லியைந்த காய வோங்கலிற் காமமாதி, கழி பெருங் கதிரை றிப்பக் கனன்றுளம் வருந்து வேனை, வழிமது வொழுக்குந் தண்டா மரையடி நீழல் சேர்க் கும், பொழிமதக் கலுழி நால்வாய்ப் பொருப்பினை வணக்கஞ் செய்வாம்.

## பாயிரம்.

சீராரும் பேரண்ட மௌலி யாகச்
சிறந்தசுட ரொருமூன்று நயன மாகக்
வேராருந் திசையெட்டுங் கரங்க ளாக
வேழ்தலத்தின் மாசுணங்க டாள்க ளாகப்

பாராரு முயிர்களுள மரங்க மாகப்
பரமுத்திக் கானதொழி னடனம் பண்ணிக்
காராரு மல்மாதி யறிஞர் நல்கக்
கண்டுகளி கூரரனைக் கருத்துள் வைப்பாம். (க)

இலையமுத லானதொழி லமல னேவ
விறையுருவாம் விந்துவிடை யியற்றித் தானு
மலையாதே யனந்தாதி யீசர்க் குள்ள
வறிவுமுத லனைத்தினையு மளித்துப் பின்னைக்
கலையாதி மாயையினைக் கலக்கி யாக்கிக்
கரியமல மாயையினைக் கழித்து நாளுந்
தலையான வானந்த முயிர்கட் கீயுஞ்
சாம்பவிதாட் கமலமலர் தலைமேல் வைப்பாம்.( )

எண்ணரிய வுயிர்கள்வினைப் பிறவி நீங்கி
யியல்பாகும் பேரின்ப மெய்த நல்குங்
கண்ணுதன்மெய் வடிவான கருணை ஞானக்
கனங்குழையைப் புணரவருங் களிற்றை வாழ்த்தி
நுண்ணியநூ லகத்தியனுக் குரைக்கு முண்மை
நோன்மைவடி வேலவனை யுளத்து நோக்கிப்
புண்ணியமே வடிவான நந்தீ சாதி
பொருவிலருட் குரவரையும் போற்றுவாமே.(௩)

ஓருரும் பேரும்வடி வொன்று மில்லா
னுன்மனியி னந்நியத்தி னுறைத லின்றிச்

காரூரு மலங்கமரும மாயை நீங்கிக்
கண்டுயிர்க டமதுகுணங் களிப்ப நாளும்
பேரூருந் திருவுருவுங் கொண்டு பூவிற்
பேசுபுகழ்ச் சிவபுரத்தில் வந்த பெம்மான்
பாரோர்கள் புகழவருஞ் சத்திய ஞானி
பதமலர்க ளிதயமுறப் பணிதல் செய்வாம். (ச)

ஏர்திகழுந் தத்துவத்தி னுருவ மாதி
யியம்பவுயி ரெழுபிறப்பு முயங்கா தெண்ணிக்
கார்திகழுங் கந்தரமுங் கங்கை யாறுங்
கண்ணுதலும் பெண்ணிடமுங் கரந்து மாக்கள்
சார்புகொடு வந்தருளி யெம்மை யாண்ட
சந்திரசே கரன்கமலத் தாள்கள் போற்றிச்
சீர்திகழு மாகமநூற் படியே யுண்மை
தெருண்டதவர் பதமலர்கள் சிந்தை செய்வாம்,

அனாதிமல மாயைமுத லான வெல்லா
மாருயிரை நீங்கியிடா தமர்ந்த வேனு
மெனாதிதுவென் பதுநீக்கி யதனைச் சேர்ந்தே
யெண்குணத்தாற் கைக்கொள்ளு மியல்பேயென்
வினாதவுரைக் குற்றமறுத் தென்னை யாளு [ன
மிருந்தவர்க ளிந்நூலை யெடுத்துக் கொள்வார்
மனாதியிவைக் கெட்டாத வரதன் கூறும்
வடகலையின் பொருளிதனை மருவலாலே. (௬)

திருவாருங் காமிகமே யாதி யாகச்
செப்புதசகாரியத்தி னுட்ப மெல்லாங்
குருவாலே யுணர்ந்தவற்றைக் கோவை செய்து
குவலயத்தி லாகமநூல கல்லா மாந்த
ரருவான மாயைமுத லான வெல்லா
மகன்றுதம தறுகுணமா ஞானா னந்தப்
பெருவாழ்வு பெறத்தமிழின் செய்யு ளாக்கிப்
பேசுதுங்கே ளாசகலப் பிறப்பற்றுயே. (எ)

பாயிர முற்றிற்று.

ஆ செய்யுள் - அ.

---

## தேசகாலபாத்திரவிலக்கணம்.

ஐயிரு பகுதி யான வாகமப் பொருளைக் கூறு, மை யறு தானம் யாது வாய்ந்தநற் காலம் யாது, சைவரில் யாவர் கேட்குந் தகுதிய ரென்று சாற்றத், தெய்வமா முனிவர் போற்றுஞ் செழுந்தவக் குரிசில் செப்பும்.(க)

மதிதவழ் குடுமித் தெய்வ மகேந்திர மலையம் விந் தம், விதியரி யரனு மேவு மேருமந் தரமே ஞான, யதி முனி வரர்சூழ் பாரி யாத்திரம் பருப்பதாதி, கதிதரு மலைய னைத்துங் கழறிட மாகு மன்றே. (உ)

சூத்தவெண் டிரைசுருட்டிச் சுடர்மணி வரன்றி யெங்குந், தத்துதீம் புனல்பாய் கங்கைத் தடத்தினில் யமுனை யாற்றி, னித்தில மணிகொ ழிக்கு நிருமதை நதியிற் றங்க, பத்திரை நதியிற் றெய்வப் பானதிக் கூ லந் தன்னில். (௩)

பூந்துணாப் பொதும்பர் சூழ்ந்த புண்ணியப் பொ ன்னி யாற்றிற், சாந்தமுந் தென்றற் கன்றுந் தமிழொ டுந் தயங்கு மோங்கல், வேந்தனூர் முனிகொ ணர்ந்த விரிதிரைப் பொருனை யாற்றிற், கூர்ந்தமா தவத்தோர் போற்றுங் குமரிமா நதிதீ ரத்தும். (௪)

கடுவொடுங் கெயிற்றுத் துத்திக் கட்செவிப் பகு வாய்ப் பாந்தண், முடிமிசைக் கிடந்த ஞால முதுமக ளிதயப்பூவின், வடிமது வனைய காசி மாநக ராதியாய பொடியணி மேனிப் புத்தேள் பொருந்துநற் பதிய னைத்தும். (ரு)

நாமநீ ராழி புல்கு நதிப்பெருங் கரையிற் றாய, வேமமா ரோடைத் தீரத் திணைமலர் நந்தனத்துஞ், சே மமார் பால னத்தின் றிருமலிநீழ றன்னிற், காமனு ரு டல்பொ டித்த கண்ணுத லால யத்தும். (௬)

இருண்மல வலிதொ லைக்கு மிருந்தவர் மடத்தும் பத்தர், திருவளர் மந்தி ரத்துந் தேசிகர் மனத்துக் கே ற்ற, குருவள ரிடத்து மிந்நூல் கூறலா மென்று தெ

ய்வ, மருவளர் குமுதச் செவ்வாய் மலைமகட் கிறைவன் சாற்றும். (எ)

வேறு.

சாற்றுமித் தலத்து தக்கிற் சார்ந்திடி லிரவி யிந்து, தோற்றிளம் பருவ மாகிக் கிளர்தரு முதற்பக் கத்தி, லே ற்றநற் றினமே கால மியம்புகா ரகங்கண் மூன்றி, னூ ற்றமார் சாம்ப வத்தை யுறுமவர் கேட்கு நீரார். (அ)

தேசகாலபாத்திரவிலக்கணம் முற்றிற்று.

ஆக செய்யுள் - கசு.

---

## சீடலக்கணம்.

விற்பொலிநு தற்சிறிய மின்னிடையொர் பாக, வ ற்புதநல் லாகம மனைத்துமருள் செய்த, சிற்பரம மூவ கைய தீக்கையினி லாக்கை, யுற்பவமில் சாம்பவ மு ரைத்திடுக வென்ன. (க)

வேறு.

அறிதவசாம்பவத்தை யறைகுவங்கேள்வி சிட்ட, நெறிதரு ஞான நல்கு நீர்மையாற் றொன்று தொட்ட, வுறவறு தீக்கைக் கெல்லா முத்தம மாத லானே, மறு வில்விஞ் ஞான தீக்கை யாமென மதிப்பர் மேலோர்.( )

அற்றவர் சமய மாதி யர்ணவ மியற்று காலேச், செ ற்றகு மணுக்க ளூனந் தொழிலிடை விட்ட நான, மு ற்றபா வனையி லூன மொழித்திடு மாத லாலே, பற்ற று தவத்தோ யீது பவித்திர மவைகட் கெல்லாம். (௩)

கழிபெரும் பத்தி யுள்ளான் கருணையா ரியனைக் கண்ட, பொழுதவன் மேனியெல்லாம் புளகம் வந்திட வுரோமம், விழிமழை பொழியக் கம்ப மேவிட மூர்ச் சித் தாங்கு, வழுவறு குரவன் கூறும் வார்த்தையிற் செவிவைத் துள்ளான். (௪)

அந்தவாய் மொழிநி னைந்தே யகத்தினின் மகிழ் ச்சி பொங்கப், பந்தமில் குரவ னிட்ட பணிசுக துக்க மேனுஞ், சிந்தனை யொருப்பா டுற்றுச் செய்துமண் மகன்ற னுழி, வந்திடும் புதுமண் போற்றன் வசமற வொழுகு வானே. (௫)

சுடரொளி மணிச்செஞ் சூட்டுத் துளையயிற் றலை யெயிற்றுப், படவர விடையிற் றீவாய்ப் பல்பொறிப் புலிக்கு ழாத்துட், கடல்வயின் மணிகொ ழிக்குங் க ங்கையின் வீழ்கென் றாலு, மடல்புனை குரவன் கூறு மருண்மொழி மறாது செய்வான். (௬)

அளவறு பொருள்க ளெல்லா மாழிநீ ருய்த்துச் சி த்தந், தளர்தலை யொழிந்து நம்மைச் சார்திநீ யென் னிற் சார்ந்து, மிளமகன் றந்தை தாய ரிலமுடன் பிற

ந்தார் ம்ற்று, முளபல கிளைக ளெல்லா மொழித்திநீ
யெனிலொ ழித்தும். (எ)

விட்டநின் கிளைஞ ரோடே மீளவுங் கூடென் றோதி
விட்ட மாயவரோ டொன்றி யிரண்டற வொழுகு வா
னே, சிட்டஞஞ் சம்பு வாற்செய் தீக்கையைப் பரிக்க
வென்றே, மட்டவி ழிதழித் தாரான் வகுத்த வாகமங்
கள் கூறும். (அ)

சீடலக்கணம் முற்றிற்று.

ஆ செய்யுள் - உச.

---

## சற்குருலக்கணம்.

என்றுநற் குரவன் கூற விருந்தமா ணக்கன் றனு,
நன்றிது மொழிந்தீர் தெய்வ ஞானதே சிகன்ற னுண்
மை, யின்றெனக் கருள வேண்டு மென்றுமுன் பணிந்
தெ ழுந்து, நின்றனன் அவனை நோக்கி நிமலவாக் கரு
ளிச் செய்வான். (க)

இருவித மாகத் தீக்கை யியற்றுமெம் மிறைவன்
றனே, யொருவித முயிரு ணின்றே யுணற்றுமா தார
மின்றி, வருமல மலகன் மங்கண் மன்னிய விரண்டும்
போக்கும், குருவரு ளுருவ மாகிக் குயிற்றிடுஞ் சகல
ர்க்கென்றே. (உ)

கறையணற் கவைநாத் துத்திக் கட்செவிப் பகுவா ய்ப் பாந்தட், கிறைபஃ றலைதொட் டோடு மெறிதிரை க் கங்கை யாதி, குறையறு நதிதீ ரத்துங் கூறுநாற் குலத்திற் றோன்றிப், பிறையணி மௌலிப் புத்தேள் பேசுநூ லனைத்துங் கற்றே. (௩)

அழிதக ளுகும் லோக வாயத ளுதி தீய, வழியுழ ன் மூடர் தம்மை மறுத்தற நிறுத்தித் தெய்வச், சுழி படு கங்கை போடே சுடர்மதி மிலைச்சு மெங்கோன், மொழி பெருஞ் சரியை யாதி முழுவது முணர்ந்து செய்தே. (௪)

கொலைபுரி யாமு லுண்மை கூறியே யுயிர் கட்கெல் லாந் தலைதரு மருள்வைத் துள்ளான் சாந்தமும் பொ றையும் பூண்டு, கலைநவில் வினைக்கி டாகக் கனுமநிக் கிரகம் பண்ணி, யுலையநுக் கிரகஞ் செய்ய வோங்கிய சதிரு முள்ளான். (௫)

சமையவா சாரத் தோடே சாந்தநற் செபந் தியா ன, மமைதரு தவமோ மங்க ளருச்சனை யாதி யெல்லா, மிமையள வதனிற் செய்தே யிறைவனூன் முறையி னெல்லா, மமையவு மோதி யந்த வருத்தமே விசாரித் துள்ளான். (௬)

சிறந்தநற் குரவற் காளாய்ச் சேர்ந்துவிஞ் ஞான தீக்கை, யறங்கரைந் தெவர்க்கு முற்ற வரும்பிணி தவி

ர்க்க வெண்ணி, மறங்கடிந் திடம்ப நீங்கி மறந்துசெய் குத்தி ரங்க, டிறந்தவ ராகத் தோடே துயர் செயும் வெறுப்பு மன்றே. (எ)

குறிகொண்மா ணாக்கர் குற்றங் குணமெலா மறி தற் கேற்ற, வறிவுநற் கிருபை சீல மற்பசந் துட்டமே விப், பிறிவிலர்ச் சிவர்னு பூதி பெற்றுறுங் கயநோய் குட்டஞ், செறிவுறு துடற்கண்ல்ல திருமலி யழகு மு ள்ளான். (அ)

மமதையாங் காரந் தீய மதியினில் விகற்பந் தீய, தமமிவை தவிர்ந்தெந் நாளுஞ் சாத்திர முணர்ந்தங் கு ள்ள, வமைதரு பரமார்த் தத்தை யறிந்தவன் குரவ னென்றே, யுமையொரு பாகத் தெங்கோ னுரைத்த வாகமங்கள் கூறும். (௯)

செப்புமிக் குணத்தி லொன்றுஞ் சேர்ந்தில னெனி னு முள்ளே, தப்பறு ஞான வாய்மை சார்ந்தவன் குர வனவா, னப்பொழு தவன்ற னேக்கா லானந்த மறி விற் றேன்று, மொப்பறு குரவன் றன்னை யுணர்ந்துநீ யணைந்தி டாயே. (௧௦)

அறம் பொரு ளின்பம் வீடு மளித்திடுங் குரவன் றன்னைச், சிறந்திட வுணரி னுன்னுட் டிரிமல மகலும் வானின், புறம்பயி லிரவி கண்ட பொழுதக லிருள்

போ லன்னன், றிறம்பயில் கரத்தாற் றீண்டிற் சிவவடி வாகுமெல்லாம்.

உண்டியொ டுறக்கங் காம முறுபய னுடைய னே னுங், கண்டகக் குழற்காற் செய்ய கனகமா நிறப்பொ குட்டு, முண்டகத் திலைநீர் தோய்ந்து முயங்கிடா ததுபோற் கன்மம், விண்டிடு மாத லாலே விமலனே கு ரவ னென்றாம். (கஉ)

அவன்மனை விமலையாகு மருளினு லவமி றீக்கை, பவமுறு நூறு கோடி பாதக மியற்றி னுலுஞ், சிவன் ருண் ஞான முள்ளே செறிந்திடு மாசின்ஞான, வுவ மையி னெறியி னின்றே யொன்றிவ னுண்மை யாமே.

சற்குருவிலக்கண முற்றிற்று.

ஆ செய்யுள் - ௩௭.

---

## அசற்குருவிலக்கணம்.

ஞானமில் குருவைச் சேர்ந்து நண்ணுவ ராயின் முத்தி, யூனமில் சிலையை யொன்றி யொருசிலை கரையி லேறு, மீனமின் ஞான மின்றி யியைந்தவன் குருத்து வத்தை, யான்றோர் நரக மெல்லா மறிந்திடு மறிந்து கொள்ளே. (சச)

எவன்குரு வழியில் ஞான மிலாமலே குரவனுகு மவனெண்ணெய் மணலி னூற்று மருந்தியே யாகாசத்தைப், பவமுறு பசிநோய் தீர்க்கும் பதம்புன லெள்ளொன் றின்றிச், சிவசிவ வவன்ற னுள்ளத் திடத்தையார் செப்பு வாரே. (கரு)

சாற்றுநூ லறிவொன் றில்லான் சமயவா சார மில்லா, னேற்றதோர் குலமுமில்லா னியம்பு மாச்சிரம மில்லா, ணுற்றல்சேர் கரம மாதி யறுகுண மனைத்து முள்ளான், பாற்றுமீ டணைமூன் றேடு பழுதுறுசீல முள்ளான். (கசா)

குற்சித மனமு மில்லான் குணமொரு சற்று மில்லா, னச்சியே யிழிஞர் மாட்டு நவையுறு பொருள்கை யேற்பா, னெச்சமின் மந்திரங்க ளெழில்பெறு தந்திரங்க ளிப்ராய்ச்சு மெய்ஞ்ஞான யோகம் பொருந்தைந்து தீக்கை யில்லான். (கஎ)

ஆசையும் வெறுப்பு முற்றே யழகுற வலங்க ரிக்கும், பூசையி னிடம்பத்தாலே புறமுற நடித்துச் செய்யும், மாசுசேர் குத்திரத்தால் வயிற்றுறும் பசிநோய் மாற்றக், கூசிடாணுகி யார்க்குங் குருக்கொடுத் துழலுவானே. (கஅ)

இப்படிப் பட்ட வாசா னியற்றிய தீக்கை பெற்ற, செப்பமில் புதல்வர் தாமுந் திளைப்பரே நரக மெல்

லாம், மைப்படி குருடன்றன்னை மற்றொரு குருடன் பற்றி, யொப்பறு நெறியைக் காணு துழலுமா போல வோய்ந்தே. (கக)

அசற்குருவிலக்கண முற்றிற்று.

ஆ செய்யுள் - ருகூ.

---

# ஞா ன தீ க்ஷை.

ஆதலான் முன்னஞ் சொன்ன வறிவுறு குரவற் காளாய், மாதவ வுபதே சங்கொண் மற்றது கேட்டி முன்ன, மோதிய தலத்திற் சென்றே யுஞற்றிமுன் பூப தீக்கை, தீதறு மண்ட பத்தைச் செய்துநாற் றுவாரத் தோடும். (க)

அதனிடை நான்மு ழத்தி னமைத்துவே திகையை யானின், புதியநன் மயங்க ரைத்தப் புனலினுன் மெழுகி யாங்கே, விதிபெறு கவ்வி யத்தை வீசிநாற் றுவாரந் தன்னிற், பதிவினற் றோரணத்தைப் பரமனூற் படியிற் செய்தே. (உ)

பழுதறு துகிலத் தாலும் பலவிதப் பட்டி னாலும், வழுவற முத்தி னாலும் வரைந்துமேல் விதான மாக்கி,

தொழுதிவண் டிமிர்பூந் தாராற் சூதபல் லவங்கடுற்று,
மழகுறு தருப்பை மாலை யாவரித் திடமீ தார்த்தே. (௩)

மையறு கவரி தூக்கி மடிப்படு துகில்க ணூற்றித்
துய்யதோர் பிறைக்கண் ணடி துவசநற் குடைநி ரைத்
துத், தெய்வமெய்த் தூப மிட்டுத் தீபமா லைகளு மேற்
றுஞ், சைவமா மண்ட பத்துத் தபனியப் பீட மீதே.

திருமலி யுபதே சஞ்செய் தேசிகன் வாச நீரா, லொ
ருமைகொண் மனத்தான் மூழ்கி யொளிகொள்பட் டா
டை சாத்திக், குருவளர் நீறு பூசிக் கோத்தகண் டிகை
யும் பூண்டு, முருகவிழ் தொடையல் சூடி முடித்துநற்
றுரியச் சந்தி. (௫)

எறிசுடர் மணிக ளிட்டே யிழைத்தநூ புரங்கள்
சாத்திப், பிறிவுறு வினைக்கீ டாகப் பிறந்திறந் தின்ப
முத்தி, யறிவுறு துழல்வீ ரீதென் றரற்றுபூங் கழல்
கள் சாத்தி, யுறுகடிப் பிணையல் சாத்தி யுதரபந் தன
மேல் வீக்கி. (௬)

மறிகடற் பிறக்கு முத்த மாலைநல் வைரக் கோவை,
குறிகொண்மா மணிகள் கோத்த குரூஉச்சுட ராரம
பூண்டு, செறிவுறு கடக மாழி யங்கதஞ் சேர்த்துத்
தெய்வப், பொறிவளர் மகுடஞ் சூடிப் பொதியமால்
வரைச்சந் தாட்டி. (௭)

தென்றிசை நோக்கு மெங்கள் தெய்வநாயகனார் மூர்த்த, மொன்றிய மனத்துள் ளாக்கி யொளிகொ ளாற் சுத்த வித்தை, யென்றசீர் மண்டபத்தி லீசர்வா ழிதமெழுட்டுள்ள, மன்றலங் கமல நாப்பண் வருசதா சிவப்பொ குட்டில். (அ)

ஒன்றிவீற் றிருந்தபின்ன ருறும்பெரும் புலன்க ளெ ல்லாம், வென்ற மாணாக்கர் தம்மின் மெய்ம்மை கொண் ஞான தீக்கை, குன்றிடா துடையான் முன்னே குளி ர்ந்தமா நதிநீ ராடி, யன்றுசெய் கடன்க ளெல்லா மமு குற வமைத்து வந்தே. (௯)

திருமலி யைந்து சுத்தி செய்தருக் கியந்தா பித்தே, யொருமருப் பினன்றன் பூசை யுஞற்றிநற் றிரவியத் திற், பரிவுற நீர்தெளித்துப் பார்த்தகை ஞான நோக் காற், குருவுரு வத்தைத் தன்னுட் கோகனத தில் வை த்தே. (௧0)

இருள்கெடப் புறம்பே பூசை யியற்றுமா போலிய ற்றிக், குருவருள் பெற்றுப் பூசை குயிற்றிட விழுந்து முன்பே, யிருபத மலருங் கையா லேந்திமஞ் சனஞ் செய் வேதி, மருவளர் கமலம் பூவில் வைத்தருச் சனே முன் செய்தே. (௧௧)

கந்தநற் றயிலத் தாலுங் கவ்வியத் தாலுமாட்டிச், சந்தமார் மதுக்கள் கூட்டித் தாபித்த வமிர்தத் தெங்

கின், வந்தநீர் பலகா ரங்கண் மலயநற் சாந்த நீரு, மெந்தைதா ளிணையி லாட்டி யிடையிடை குளிர்ந்த நீரும். (கஉ)

அருக்கிய நீரு மாட்டி யழகுட னுலர்ந்த சுத்த, விருப்புறு திருவொற் றுடை விரைவுடன் சாத்தி மற் றோர், திருப்பொலி பீட மீதே செழுமடி விரித்து நாப் பண்,மருக்கமழ் சாந்தம்பூசிவரைந்ததிற் பிரணவத்தை.

நமவெனு மெழுத்துள் ளாக்கி நறைகமழ் மலர்கு வித்தே, யுமையர னுருவ மாகி யோங்கிய தாளி ரண்டு, மமைவுற விருத்தி யாங்கே யழகுசெய் கலவைச் சா ந்த, மிமையவர் மகிழ்பூந் தாரோ டிலங்குப்ட் டாடை சாத்தி. (கச)

நறைகமழ் தூபந்தீப நல்லவான் பால ளாவிக், கு றையறு சருத்தாம் பூலங் கொடுத்துமற் றுபசா ரங் கண், முறைவழு வாதுசெய்து முன்பணிந் தெழுந்து நின்று, சிறையுடற் பொறையைத் தீர்க்குந் தேசிக போ ற்றி போற்றி. (கரு)

ஒருமல முடையார் தம்மை யுயிர்க்குயி ராகி யா ண்டு, மிருமல முடையார் தம்மை யிச்சையா லளித் துந் தீய, திருமல முடையோர்க் காகத் தீவக மாகி வந்து, கருவழி சுழலாவண்ணங் காத்தருள் குரவபோ ற்றி. (கசா)

ஆலின்கீ ழிருந்து முன்னு ளருந்தவர் நால்வர்க்காக, நூலுரை செய்தாய்போற்றி நொய்யனேன் றனக்கா விந்தச், சீலமார் மண்டபத்தே சேர்ந்துவீற் றிருந்தே பண்டை, மூலநோய் களைந்தாய் போற்றி முனிவனே போற்றி போற்றி. (கஎ)

வன்பெரும் பூத வாக்கை மண்டல நுணிய காயந், துன்பமில் நகர முள்ளே சொலித்திடும் பரகா யந்தா, னன்பர்கள் போற்றுந் தெய்வ வாலய மதனில் வாழு, மென்பெரு முயிரே யாக்கை யெனவுறைந் தருள்வாய் போற்றி. (கஅ)

துன்பமா ராண் வத்திற் றுதைந்தெழு திமிரத் தாலே, யின்பமார் விழியி ழந்த வெனக்குமெய்ஞ் ஞானமென்னு, மன்புறு சலாகை நல்ல வஞ்சனத் தாலேதூய, வென்பெரு விழிகளுளு மிலங்கிட வருள்வாய் போற்றி. (கக)

உரியவா தார சத்தி யூர்முத னுதை மீறுய், விரிவுறு புவன மெல்லாம் விரவிய போகந் துய்ப்பித், தரியசீர் மாயை கன்ம மாணவ மகற்றி யென்னைத், தெரிவுற வெனக்குந் தந்த தீர்த்தனே போற்றி போற்றி. (உ0)

இருவினை யாவி யீச னில்லையென் றியம்பித் தியஞ் வருவினை புரியும் லோக வாயத னுதி யோர்செய், திரி

விலா நெறியிற் புக்குச் சேர்ந்துகண் டுமென் மீண்டு, கருவழி சுழலா வாறு காத்தருள் கடவுள் போற்றி.()

நின்னது சத்தி யாலே நீடுல கனைத்துந் தந்து, மன்னுவித் தழித்து மீண்டும் வந்திட வருள்வாய் போற்றி, யென்னுயிர்த் தலைவா போற்றி யிருண்மல மட ங்க நாயேன், சென்னியிற் பாதஞ் சூட்டுந் தேசிக போற்றி போற்றி. (உஉ)

கலைதொறுந் தத்து வங்கள் கவினுறும் புரங்கண் மிக்க, மலைபெறு மக்கரங்கள் வருபத மந்திரங்க, ணி லைபெற வருத்தி யெல்லா நினைந்தற நீக்கிக் கன்மத், துலையினி னின் மூல நோயின் றொழிலையுந் தடுப்பாய் போற்றி. (உங)

வேறு.

என்றே துதித்துப் பணிந்தவன்ற னிணைத்தாண் மலரைச் சென்னியினுங், குன்றா வருள்சேர் விழிகளி னுங் கோடா முகத்து மிதயத்துந், தன்றாழ் கரங்க ளாலணைத்துத் தயங்கு பீடந் தனிலமைத்து, நின்றே யவன்ற னருணோக்கி நெறியாற் றொழுது விடைபெ ற்றே. (உச)

உண்டே னெருநற் பகலொருகா லுறுபேர் நிதியி லாணைந்துங், கொண்டே துயின்று புலர்வதன்முன் குறித்தே யெழுந்து புனன்மூழ்கி, யண்டா திப்ன்ற

ன்ருளாலே யழகா ரற்றைக் கடன னைத்துந், தண்டா தியற்றி யுணவொழிந்து தருவான் றளியார் சாதகம் போல். (உரு)

எழிலார் குரவ னருணேக்க மெஞ்ஞான் றருளு மென்றென்று, தொழுவா னிருந்த தாபதரைச் சூழ் வானவர்கண் முன்னின்று, விழுவா னெழுவான் மொ ழிகுளறி விழிநீர் பொழியக் கம்பித்தே, யழுவா னி டைவந் தானைந்து மழகார் மனுவொ டளித்தலுமே. ()

அருந்தி முக்கா லிடையிடையே யாசமனஞ்செய் தருள்வழியே, பொருந்தி யுள்ளே போதகன்முன் போதமறவே விழுந் தெழுந்தங், கிருந்த குரவன் றனை நோக்கி யிருகூர் விழிநீர் மழையெனவே, சொ ரிந்த புதல்வன் றனைத்தெய்வத் துயர்தீர் நோக்காற் சுத்திசெய்தே. (உஎ)

தெளித்தே நீரை யத்திரத்தாற் சிவமாங் கரமு மு டிமீதி, லளித்தே யவன்ற னிதயமுத லைந்தா தாரத் தவருருவங், களித்தே நினைந்து தன்றலைமேற் கவினார் குருமண் டலநடுவே, துளித்தே னரும்பு மாயிரஞ் செந் தோட்டுக் கமல மலர்மீதே. (உஅ)

வேறு.

திருவரு ளுருவை யாசான் செபைமல ரனைய செ வ்வி, யிருவிழி யிருதிண் டோள்க ளெழிறிகழ் செம்

பட் டாடை, பருகுதேன் பிலிற்ற ரத்தோற் பலமலர் செஞ்சாந் தோடே, மருவிமா மணியி சைக்கு மகுட மீதுற நினைந்து. (உகூ)

வேறு.

அந்நா யகன்சே வடிபோற்றி யணைந்தே யவன்ற னனுக்கிரக, முன்னு ளமைந்த குண்டவுரு மூலா தா ரத் தனலெழுப்பித், தென்னுர் புருவத் திடையடை யுந் தேயா மதியின் சுதை நெய்யாற், தன்னுர் மன மும் புந்தியுமே சாருஞ் சுருக்குஞ் சுருவமுமாய். (௩0)

சீரார் கலைகள் சமிதையெனச் செறியு நாதத் தரு ப்பையினு, லேரார் கிருத சுத்தியினை யியற்றி முன் னே யிருத்தலினு, லோரா வழலின் முகமதனை யுஞ ற்று தொழிந்தே யோமத்தை, தாரார் சந்தி மயமா குஞ் சாதமனுவா லியற்றியபின். (௩க)

வேறு.

திருவருள் பெறுமா ணுக்கன் றேகத்திற் பூதத் தா னத், தருள்புர மந்தி ரங்க ளணிபெறு பதம்வன் னங் கள், வருபுரந் தத்து வங்கள் மருவிய கலையொவ் வொ ன்றி, னிரைபெற நிறுத்தி வேருய் நீங்குமா ருேமஞ் செய்தே. (௩உ)

சிவமனு வதனு லுள்ளத் திருத்தியா மளவு மோம, பவமற வியற்றி மற்ற வங்கமந் திரங்கட் கெல்லாம்,

பவமுறு பத்துக் கொன்று பரிவுற வளித்துப் பின்னைப், புவனநா யகன்மூ லத்தாற் பூரணாகுதி புரிந்தே.

அழலிடை மூலா தாரத் தரனருட் சத்தி மேவு, மெழிறிகழ் யோகத் தன்னா ரிடத்தினிற் புதல்வனாவி, வழுவற வாங்கி யோனி மன்னுவித் திடவ மைத்த, வி ழுக்கம ரிருது சங்க மாமென வறையு நூலே. (௩௪)

பிரிவுறு மலத்தி னின்றே பிறித்துருத் திரனார்க் காவி, யரியசீர்ப் புதல்வ னாத லழகிய கருப்பா தனம், திருவருள் சுதந்தி ராதி செறிதரு குணங்க ளெல்லாம், மருவுத ஞனே புஞ்ச வனமென மதிப்பர் மேலோர். (௩௫)

அருவமா மாயை யாவி யறிவுற விவேகந் தானே, திருவளர் தவத்தின் மிக்கோய் சீமந்தோந் நயன மெல்லாந், தருசிவ முதலதான சதாசதப் பொருளை யாங்கே, மருவியுட் கோட ஞனே மதித்திடிற் செனன மாகும். (௩௬)

திரிமல மகன்று தன்னுட் சிவத்துவந் தோன்ற ஞனே, பெரியதோர் நாம மென்றே பேசுவ ரறிவின் மிக்கோர், தெரிவுறு சிவத்து வத்தைச் சேருத றன்னைத் தானே, மருவுறு முபநிட் கிராம ணமெனம திப்பர் மன்னே. (௩௭)

பொருவறு பரமா னந்தம் புசித்திட றன்னைத் தன்னுட், பிரிவுறு துறையு மன்னப் பிராசன மென்பர் மேலோர், துரிசறு சிவமே மேலாய்த் தோன்றுத லெவர்க்கும் யாதொன், றரியதோர் சென்ன மாமென் றறைவர்தத் துவமு முணர்ந்தோர். (௩அ)

அலகிலாப் பாச கால மகற்றுமெய்ஞ் ஞான நூலோ, டலவுத லொன்றி னுரு முபநய னந்தா னென்பர், நிலவிடா திந்தி யத்தி னீடறி வினைம றைத்தல், பலர்புகழ் விரத தேசப் பான்மையாம் பகருங் காலே.

எங்கணு நிறைந்தோன் றன்னோ டிரண்டற விசைந்து நாளுந், தங்கிய வினைக்கீ டாகச் சார்ந்திடுந் தனுவோ டொன்றி, மங்கிடு மறுபி றப்பை மறவற விடுத்த றுனே, யங்கணன் கோதா னந்தா னுமென வறைந்தா னன்றே. (௪0)

உலகுறு பொருள்க ளோடே யுற்ற பேராசை நீத்த, விலகுநீ ராட வென்றே யிறைவனு லியம்பா நிற்கு, மலகில்சிற் சத்தி யோடே யனுபவித் திடுத லென்று, நிலைபெறு விவாக மென்று நிமலநூ லனைத்துங் கூறும். (௪௧)

உலவிடு மனந்த சத்தி யோடெழுந் திடாது நிற்றல், பலர்புகழ் வனத்திற் சேறல் பழுதறத் தமியனுகி,

யிலகிடு சிவசற்பாவ மெதித்துவ மாயீ ரெட்டும், புல
முற நினைந்த பின்னர்ப் பூரணா குதியுஞ் செய்தே. ( )

அரியதோ ரிராகு நீங்க வழுகுறு மதிபோ லாங்
கே, மருவிய புதல்வ ஞவி மகிழ்வுற வெடுத்து மெல்
லப், பொருவறு பிரம ஞடிப் புழைவழி யேறி மீதே,
குருவருள் மண்ட பத்திற் கோகன கத்தி லங்கும். ( )

திருவருண் ஞானந்தச் செழுஞ்சுட ரோடொன் ருகி, மருவுற யோசித் தாங்கே மாசறு சிவன்போ ணேக்கி, யிருண்மல மகற்று ஞான விருந்தவர் தமக்கு மேலாங், குருபரன் மதித்து மோமங் குயிற்றியா றத்து வாவும். (சச)

மனமுற நினைந்து நீக்க மறிந்துமந் திரம்ப தங்க, ளினமுறு மக்க ரங்க ளெழிறிகழ் புரங்கண் மிக்க, முன்முறை தத்துவங்கண் மொழிதரு கலைக ளெல்லா, முனியகத் தோமம் பண்ணி யொடுங்குமாற் றினைநினைந்தே. (சரு)

காரணா திபரின் மேலாங் கழிபெருஞ் சிவபா வத்தாற், பூரணா குதியும் பண்ணிப் பொருவறு விழிகளாலே, பாரணா தீதமான பராநந்த ரூபமாகுந், தாரணா சத்தியாகச் சார்ந்தவன் றனுவைப் பார்த்தே. (சசு)

முழுதுணர்ந் தெவர்க்கும் போக முத்தியை வழங்கு மெங்கோன், செழுமலர்ப் பொகுட்டு மீதே சேர்

குருமண் டலத்துப், பழுதற யோசித் தாங்கே பயில் புதல் வன்றனுவி, வழுவறு மவன்கா யத்தின் மன்னிட வமைத்து வைத்தே. (சஎ)

ஒடுங்குமா றடங்கி யுள்ளே யொதுங்குமா றத்து வாவும், படங் கொள்பாம் பசைத்தான் றன்னிற் பழு தற வமைத்து ஞான, மடங்கலா னவனை, பின்னும் வாச்சிய வாசக மிறந்தே, யடங்கிடா மனவாக் குக் கட் கோசர மாகு மன்றே. (சஅ)

அறிவுறு பிரமா ணங்கட் கதீதமா யொப்பொன் றின்றிப், பொறிகர ணங்கட் கெல்லாம் புலப்படா தி லக்க ணங்கள், செறிவுறு தாதியந்தந் தீர்ந்துகே வல மா யுள்ளே, பிறிதரா வனந்தா னந்தப் பெற்றியா யெவைக்கு மேலாய். (சகூ)

துகளறு வடிவ மாகித் துவித மத்துவித மின்றி, யக ளமா யகண்ட மாகு மறிவினைத் தியானம் பண்ணிச், சகளமாம் புதல்வன் றன்னைத் தடக்கையா லணைத்த வன்றன், றிகழ்தரு சென்னி மீதே சிவவடி வினைநினை ந்தே. (ரு0)

அவன்றனை யெதிர்நோக்காக வழகுற முன்னிருத் திச், சிவன்றன துருவ மாயுஞ் சிவசக்தி வடிவமாயு, நவந்தரு கமலத் தோங்கு நாண்மலர்ப் பாதஞ் சூட்

டப், பவந்தவிர் புதல்வன் றானும் பங்கயச் செங்கை கொண்டே. (௫க)

முடிமுதற் றான மெல்லா முறைமுறை யமைத்து முன்னின், றடியனே னுவி யாக்கை யரும்பொரு ளனைத்தும் யான்செய், கொடுவினை யகலுமாறு கொண்டருளெனப்ப ணிந்து, கடிகமழ் புனலினோடு காஞ்சன மணிக லந்தே. (௫உ)

மனமொழி மெய்க ளாலும் மகிழ்வுறக் கொடுக்க வாசா, னினமலி பொருளனைத்து மெனதென வாங்க லாலே, தனதுறு வசமொன் றின்றிச் சார்ந்துமெய் புளகங் கம்ப, முனமுறு பரமா னந்த முகிழ்த்திட வங்க ணின்றே. (௫௩)

ஆடுவன் கரங்கள் கொட்டி யழகுற மெய்வி யர்ப்பப், பாடுவ னுத கீதம் பலபல விதங்களாக, வோடுவன் சிரிப்பன் பாச வுணர்வினை யிழந்து தன்னைத், தேடுவன் றிகைப்ப னுசான் றிருவரு ளேக்கஞ் செய்தே.

மாறில்சீர்ப் புதல்வன் றன்னை வரவழைத் திருத்திக் கோமா, னுறு மீரேழு முன்னின் றளிக்கு மேழ்மேழி லாக்கி, வீறுசேர் சிவன வன்றன் விமலையோ டொன்று மூலங், கூறுசெய் தருச்சனைக்குக் குறைவற வுபதே சித்தே. (௫௫)

திருமலி புதல்வ னுக்குத் தீதுறத் தான்முன் சூடு;
மருவளர் தொடையல் சூட்டி மவுலியிற் புழற்காற்
செய்ய, விருசரோ ருக்கங்க ளென்னை வெறிசுடர்க் கட
கமாழி, மருவிய கரங்களாலே மகிழ்வுற வபிடே கித்
தே. (௫௬)

ஓங்குமுப் பொருளி னுண்மை யுரைத்துமுன் னத
னை நன்று, யாங்கவன் றெளியு மாற்று லையிரு பகுதி
யாகத், தேங்கமழ் தமிழ்த் தாரான் செப்பு காரியத்
தைத் தானும், பாங்கினு லருளிச் செய்யப் பழுதற
வவனுங் கேட்டே.

திருவளர் பாத பூசை செய்துமுன் பணிந்தெ ழுந்
தே, யருவமா யுருவ மாகி யருவுரு வாகி யன்று, நிரு
மல வடிவி ருக்க நீசனேன் றன்னை யாளக், குருவருள்
வடிவங் கொண்ட குழகனே போற்றி போற்றி. (௫௮)

ஐயனே போற்றி யாண்ட வமலனே போற்றி ஞான
மெய்யனே போற்றி தீய வினைவழி யுழலா வண்ணம்;
பொய்ய னேன்றன்னை யாளும் புண்ணியப் பொருளே
போற்றி, சைவனே போற்றி யெங்க டலைவனே போ
ற்றி போற்றி. (௫௯)

சம்புவே போற்றி யார்க்குந் தாணுவே போற்றி மே
லை, யும்பரா லறிய வொண்ணு வொருவநீ குரவ னாகி,

யிம்பரில் வந்து நீயெ னிருண்மல வலிதொலைக்கும், நம்பனே போற்றி யெங்க ளையக போற்றி போற்றி. ()

தந்தையா யெனைமு னீன்ற தாயுமா யளித்தாய் வாழி, சிந்தையே வாழி நாயேன் றிளைத்திடும் பொருளே வாழி, யந்தமோ டாதி யில்லா வமலனே வாழி முன்னைப், பந்தமா மலநோய் தீர்க்கும் பரமனே வாழி யென்றே. (கூக)

துதித்துநீ டண்டு போலத் துயர்கெட நாணொன் றின்றி, விதிப்படி பணிந்து மூத்த மெய்த்தவர் தம்மையெல்லாம், மதிப்பொடு வணங்கி யன்னோர் மகிழ்வுறக் காசுந் தூசு, நிதிக்குவை தானுந் தானுநேசமோ டளித்துப் பின்னை. (கூஉ)

அணிசெய் தோர் மண்ட பத்தே யழகுசேர் கம்பலத்தான், மணியணி மாலையாலும் வண்டொடு சுரும்பரற்றப், பிணிமுறுக் கவிழ்ந்து செந்தேன் பிலிற்றுபூந் தொடைய லாலும், நணுகியே குரவன் றன்னை நவையறு தவத்தோ ரோடும். (கூங)

இங்கெழுந் தருள வேண்டு மென்றுமுன் பணிந்தெழுந்தே, யங்கவர் பாத மெல்லா மழகுறு புனல்களாட்டிப், பங்கமி லர்த னத்திற் பரிவுற விருத்தி நல்ல, கொங்கவிழ் மலர்கள் செங்கை கொண்டருச் சனைபுரிந்தே. (கூச)

பரிகலந் திருத்தி யான்பாற் பதமுத லளித்தன்
ஞரை, வுரிமையா லமுது செய்வித் துறுபெருஞ்
சேட மாந்தி, யிருண்மல வலிக டீர விம்மையே சீவன்
முத்தி, மருவினன் ஞான தீக்கை வாழ்விது வெனவ
ளித்தான். (௬௫)

ஞானதீக்ஷை முற்றிற்று,

ஆக செய்யுள் - கஉக,

---

முதலாவது

## தத்துவரூபம்.

என்றினிய தேசிக னியம்பவது கேளா
நின்ற புதல் வன்றொழுது நீடருளி னாலே
யன்றுதச காரிய மளித்தமுறை நாயேற்
கின்றருள்செய் யென்றிடவு மேந்தலருள் செய்வான்.

வேறு.

தத்துவரூபங் காட்சி தற்சுத்தி யான்மரூபஞ், சித்
துயிர்க் காட்சி சுத்தி சிவரூபந் தெரிசனத்தோ, டொ
த்துறை யோகம் போக மொண்பதோ டொன்று மன்
றோ, பத்தெனுங் காரியத்தி னுத்தேசம் புகருங்காலே.

வேறு.

ஆகி லிப்படி யையிரு காரியம்
வாகை சூடிய தாபத மன்னவ
வோகை யோடெற் குணர்த்துதி யென்றனு
மேகன் ஞான வியல்பை யியம்புவான். (௩)

வேறு.

சிவசம வேதை யாகிச் சித்தாகி யமலே யாகு, மூவ
மையில் சத்தி யொன்றே ஞானமா முரைக்கின் முன்
னுட், பவமறு காலந் தன்னிற் பருவஞ்சே ருயிர்கட்
கீச, னவமற வுரைத்த நாலே மூாகமா தீத மாகும். (௪)

சுத்தமாம் விந்து மாயை யிடத்தெழுந் தூல சூ
க்க, தத்துவ மனைத்து நான்காந் தனுகர ணுதி யாக,
வுத்தம குணத்தோ யுன்னே டொன்றியே நின்ற வெ
ன்றும், புத்திசெய் மூன்றதாகப் புகன்றிடி னுருவ
மீதாம். (௫)

மேதினி யாதி யாக மேயதத் துவங்க ளெல்லாஞ்,
சோதியாய்ப் புவன நாதர்சூழ்ந்தினி திருக்க வெங்கு,
மாதிநா யகனு லியாவு மகத்தினு மசித்தாய்க் கா
ண்ட, நீதிலாத் தத்து வத்தின் றெரிசனஞ் செப்புங்
காலே. (௬)

பூமுதற் சிவமீ ரூகப் பொருந்துதத் துவங்க டம்
மை, யாமுறை யொன்றை யொன்றி லடக்கியே வைத்

தெலாமு, நாமலவென்றுளெண்ணி நகுதல்செய் திடுதலன்றோ, வாமென்பர் தத்துவ சுத்தியாகமமுணர்ந்த மேலோர். (எ)

அறிவதாய் வன்னமின்றி யருவமாயகில மெங்குஞ், செறிவதாய் யானென்றோதுஞ் சிறப்புடைத்தாகி மேலாய்ப், பிறிவதாய்ப் பின்னுபின்னப் பிணித்தமும் மலத்தினூ, முறுவதா மான்மரூப முத்தமகுணத்தின் மிக்கோய். (அ)

அணுவினை யடைந்தேயென்று மகன்றிடா ஞானச் செய்தி, துணியபே ருருவந் தன்னை நோக்காது நோக்கிப் பொல்லாத், திணியபே ருருவிற் றோன்றுஞ் சிற்றறி வல்ல யானென், றெணுவதே யணுவின் காட்சி யென்றனனெவர்க்கு மேலோன். (௯)

அந்தவா காயந் தன்னை யடைந்திடு வதனுக் கேற்ற, சிந்தனை யெல்லா மீசன் செயலெனத் தெளிந்து சேர்த்த, பந்தம்யா னல்லேலெல்லாம் பரவச மென்று பார்க்குஞ், சுந்தர வறிவே யான்ம சுத்தியாஞ் சொல்லுங் காலே. (௧0)

அருவுரு விரண்டுமின்றி யதீதமாய்த் துரியத் தப்பாற், பரசிவ மாகியெல்லாத் தத்துவப் பான்மையீந்து, பெரியதோர் தாணு வாகிப் பேசுதத் துவங் கட

ந்த, திருவருளுருவ நாளுஞ் சிவரூப மாகு மென்பர். (௧௧)

அண்டத்துக் கண்ட மாகியணுவினுக் கண்ட மாகிக், கொண்டுதா னணுக்க ளுள்ளங் குகையெனத் தோற்ற நாசம், விண்டுபே ருபாதி நீங்கிவிமலமா யுயிருட் டோன்றுந், தெண்டிரை யமுத மென்னச் சிவதரி சனமீதாமே. (௧௨)

தன்னுயிர் சிவத்தோ டொன்றத் தகைவிலா மலங்க ணீக்கி, யன்னது நானே யாமென் றன்னிய மிலாமை நோக்கிப், பின்னமா மவனில் யானிப் பிறபிறப் புறுத லாலே, யென்னுமா தரவைவிட்டல் சிவயோக மென்பர் மேலோர். (௧௩)

உண்மையா ஞான னந்த வொளியினு ளடங்கித் தூய, திண்மையாங் குணங்க ளோடுஞ்சேர்ந்தனு பவித்து நீங்கா, வண்மையா லதிசயங்கண் மாய்ந்துதானாகி நின்ற, துண்மையே சிவபோ கந்தா னுமென நுவலு நூலே. (௧௪)

இதுதச காரி யத்தி னிலக்கணம் பரீக்கை முற்று, மதிசெய்தா ருரைக்க வல்லா ராயினும் வடநூல் வல்ல, வதிகவா லறிஞர்கூற வையமுந் திரிவு மின்றி, விதிமுறை யுணர்ந்த வாறு விளம்புவங் கேட்டி மேலோய்.

யாதுபா தானத் தென்று மிறைவன்று னிலய மா
தி, பேதமூன் றுண்டா யாரும் பேசுதற் குரியனுணு
ணுதுமா மாயை மாயை குண்டலி யமல விந்துத், தீதி
ல்வா கீசி வித்தை சிவமினைவ பரியா யப்பேர். (கசு)

ஆதியாங் காலந் தன்னி லனந்தகா ரியமுள் ளாக்
கித், தீதிலாக் குடிலை நாப்பண் சிறந்ததோர் ஞானந்
தோன்றுஞ், சோதியா யருவ மாகி யுலகெலாஞ் சூழ்
ந்து மேலாய்ப், பேதியா வதற்கு நாம நாதமாம் பேசு
ங் காலே. (கஎ)

சாதகர்க் கிலக்கு மாகித் தயங்குநற் படிக மென்
னச், சோதியா யுருவ மின்றாய்த் தோன்றுதத் துவங்
கட் கெல்லா, மாதியாய் மேய மின்றி யனுமய மாகி
யொன்றாய்க், கோதிலோங் கார மாகி யுயிர்தொறுங்
கூடி நின்றே. (கஅ)

குறைவற வறிவை யார்க்குங் கொடுத்தாற் குருவ
மாகிச், செறியுமூ வுலக மெல்லாஞ் சிவமெனத் தொ
ருண்டு போற்றப், பிறிவுறு வாக்கு நான்காய்ப் பிறப்
பதற் கிடமாய் வியா, நெறியுடைத் தாகு மீது சிவ
மென நிகழ்த்து நூலே. (ககூ)

கிரியையாம் விந்து முன்சொல்கேடிறத் துவத்துட்
டோன்றி, யரியசீ ரமலன் சத்திக் கமர்விட மாகி யெ
ல்லாம், பரிவுற வளிக்க வந்தப் பான்மையாற் பதமு

மாகி, யுரியவைங் கலையு மாகுஞ் சத்திதத் துவமென்
றோரே. (உ0)

ஞானமுங் கிரியை தானு நணுகியொத் தெவர்க்கும்
போக, மானதோ ரூபாரூப மாகியங் குரமாய்த் தோ
ன்று, மீனமில் சத்தி யின்பா லிழுதுவிற் கீடம்போல
வான்னா யகனுர் மன்னுஞ் சதாசிவ மதிக்குங் காலே.

ஏறியே கிரியை ஞான மிழிந்ததீச் சுரந்தான் முன்
னே, கூறியசதாசி வத்திற் குறைவுற வுதிக்கும் வித்
தை, மாறிலீச் சுரத்திற் றேன்று மபங்கியே கிரியை
ஞானம், வீறிட வமலன் றனே விளைத்திடு மிவைக
ளெல்லாம். (உஉ)

சுத்தமாம் விந்து வின்கட் டோன்றுதத் துவங்க
ளைந்து, நித்தமென் றுரைப்பர் சூக்க நீங்கிடா நீர்மை
யாலே, யத்தகு தூலந் தானு மடங்கிடா தாகிற் றோ
ற்ற, மித்தையாம் மாயா வாத வெறிஞருக் காகு மீதே.

நித்தமா யொன்று யெங்கு நிறைந்தரு வாகி வீ
யாச், சத்துமாய் வினைக ளெல்லாஞ் சார்ந்திடு தான
மாகிச், சுத்தமன் றாகிக் கன்மத் தொடக்கறு முயிர்க
ட் கெல்லாம், பெத்தமாய் நீங்கா தோங்கு மாயையின்
பெற்றி தானே. (உச)

இருவித மாகு மாயை யேயதத் துவங்க ளெல்லா
மொருவகை சூக்கந் தூல மொருவகை யாகு ஞானக்
கிரியைகள் விளக்கிச் சூக்கந் தத்துவக் கிழமை யாலே
மருவியான் மாவை நீங்கா தமர்ந்திடு மதிக்குங் காலே.

உற்றிடும் புவனத்தோடு முளதனு வாகி யோரு
மற்றைய தூலந்தானு மாய்ந்திடா துறையு மீது
கற்றவ ரறிவர் யாருங் காண்பரேற் கால மாதி
தெற்றெனவுருவமாகிப்புவனமாய்ச்செறியாமுன்னர்.

படிமுத லானவெல்லாம் பயினுமே லிவற்றை நா
ளு, முடிவுசெய் தூக்கிக் காக்கு முதல்வருண் டென்
பதென்னை, நொடியிலார் முயற்கோ டொக்கு நோன்
மையி னெல்லி னெல்லா, வடிவுறுஞ் சத்தி யாகி வரு
வது வியத்தி யாமே. (உஎ)

ஆதலான் மாயை தன்னைக் கலக்கிட வனந்த ருள்
ளக், கோதிறத் துவங்க ளுண்டாம் விகுதியின் கூட்ட
ந்தன்னை, யோதுவர் மாயையாகத் தத்துவத் தோ
டொன் ருக்கித், தீதிலா மாயாரூப மீதெனச் செப்பு
நூலே. (உஅ)

மாயையிற் காலந் தோன்றுந் துடிமுதன் மருவி நு
ட்ப, மாயதோர் தூல மூன்று யுலகெலா மாக்கிப் போ
க்கி, யேயவே மலபா கந்தா னியற்றிடு மனந்த தேவ,
நாயனு ரருளி னலே யுயிரெலா முத்தி நண்ணு.(உக)

பின்னதி னியதி தோன்றிப் பெருகிய நியமரூபந், தன்னியல் பாகி யெல்லா வினைகளுஞ் சாரச் செங்கோன், மன்னவ னாணை யென்ன வரன்முறை நடாத்து மென்றும், மன்னதா லணுக்கள் யாவு மருந்திடும் போக மார்ந்தே. (௩௦)

அந்தமோ கினியிற் றோன்றி யருங்கலை சிறித வித்தை, சிந்தியே ஞானம் வைத்துத் தெரிவிக்குங் கிரியா சத்தி, நந்திடா தோரி டத்தே நணுகிடும் வினைக்கீ டாக, முந்திய பந்த மென்று மொழிந்திடும் புருடர்க் கெல்லாம். (௩௧)

வித்தையக் கலையிற் றோன்றி யறிவினை விளக்க வுண்ணும், புத்தியிற் போக மெல்லாம் பொருந்தியே யுயிர்க ளென்று, முத்தம கரண மாக வுரைக்கலா மதனாற் புத்திக், கொத்துறு சத்த மாதி விடயமுங் கொள்ளுந் தானே. (௩௨)

வித்தையோ டிராகந் தோன்றி மேவியே யிச்சாரூபம், புத்தியின் விசிட்டத் தாலும் புறகலற் குபகரிக்குந், தத்துவ மைந்தி னுள்ளே சார்ந்திடுஞ் சகலர்க் கஞ்ஞான், றொத்திடும் புருட னாய தத்துவ முதிக்கு மன்றே. (௩௩)

ஆயதத் துவத்தி னாலே யடைந்துபோத் திருத்துவத்தை, மாயை யான் மயங்கிப் புத்தி மருவிய போக

மெல்லா, நாயக னருளி னாலே நயந்திடு முயிர்க ளென்று, மேயதத் துவங்க ளேழு மிச்சிர மென்பர் மேலோர். (௩௪)

கூறிய கலையின் மாணுங் குணம்விளங் காமைத் தோன்று, மேறுதல் குறைத லின்றி யிதனின்முக் குணங்க ளாகு, மாறில்சீ கண்டராலே சத்துவ மலங்க ணீங்கி, யீறிலாச் சுகமா முத்தி யெய்துதற் கேதுவாமே. (௩௫)

துய்யசீ ரிராசதந்தான் றுக்கமாய்ச் சுவர்க்கத் துய்க்கு, மையுறு மோகமாகித் தாபத நரகத் தாக்கு, மெய்திமுக் குணங்க ளெல்லா வுயிர்தொறும் புந்தி யாதி, மெய்யுறு தத்து வத்திற் பின்னமாய் விசேடித் தோங்கும். (௩௬)

புந்திமுக் குணத்திற் றோன்றிப் பொருந்திய வினைக்கீ டாக, வுந்திமே லோடு கீழு முறும்பெரும் போக மெல்லாந், தந்துநிச் சயித்து நிற்குந் தருமமுன் னைய வெட்டும், வந்திடும் விருத்தி யாகு மதியினுக் கெண்ணுங் காலே. (௩௭)

தருமமுன் னைய நான்குஞ் சத்துவ மிராச தந்தா, னுரியசீ ரிராக மாகு மொழிந்தவை மூன்று முன்னே, மருவிய தாம தத்தின் குணமென மதிப்பர் புந்தி, குருவளர் சத்து வத்தின் குணமிக விரண்டுங் குன்றும்.

யாவெனு மகந்தை யென்று மிருக்குமாங் காரந்தா
னு, மூனமில் புந்தி யுள்ளே யுதித்திடு மதுவு மூன்று,
மானதை சதவைகாரி யணிகொள்பூ தாதி யென்றே,
நானலா லெனையொப் பார்க ணட்டினி லொரு வரு
ண்டோ. (௩௯)

என்றபே ரகந்தைக் குள்ளே யேயதை சதத்திற்
றோன்றி, நின்றிடு மனங்கண் ணேக்கி நிகழ்பெரும்
விடய மெல்லாஞ், சென்றணை விக்கும் புந்தி நிச்சயஞ்
செய்ய நாளு, மொன்றிய காக்கைக் கண்போ லுள்ளி
னும் புறத்துஞ் சென்றே. (௪0)

தோற்றும்பின் றைசதத்திற் சோத்திர மாதி யை
ந்துஞ், சாற்றும்வா னுதி யைந்திற் சத்தமுஞ் செவி
யிற் சாருங், காற்றுமுன் னுய நான்கிற் கலந்திடும் பரி
சந் தொக்கி, லேற்றமாம் விழிநா நாசி விடயமு மிவை
போ லெண்ணே. (௪௧)

வண்மைவை காரி கத்தின் வந்தகன் மேந்தி யங்
கள், பண்ணமர் வாக்குப் பாணி பாதபா யுருவு பத்
தந், திண்மைகொ டொழில்க ளைந்துஞ் செப்புவர் வ
சனந்தான, மண்மைகொள் கமனத் தோடு விசர்க்க
மா னந்த மென்றே. (௪௨)

ஓதுபூ தாதி கத்தி னுதிக்குமாத் திரைக ளைந்துந்,
தீதிலாச் சத்த மாதி சேர்ந்திடுங் கந்தந் தன்னிற்,

கோதிலா விரத மந்தங் கூடுமற் றதனை நீங்கா, தீது
போன் மூன்றி னையுங் குணங்க ளொன்றொன் றிழி
ந்தே. (௪௩)

பூதமாத் திரைக டம்மிற் பொருந்தியே யிருக்கு
மென்றுங், தீதிலாத் தானந் தானி யாமிவை செப்புங்
காலை, யோதுமாத் திரைக டம்போ லுறுமதி விலே
பம் போலக், கோதிலாப் பூத மைந்துங் கூடியும் வே
றா மன்றே. (௪௪)

வானமுஞ் சத்த மாதி மாத்திரை யதனிற் றோன்
றித், தானஞ்செய் திடமே வைக்குஞ் சார்விட மாகி
வேறற், றானமி றீவி ராதி சத்தமு முதிப்பித் தோ
ங்கு, மீனமில் வரவு போக்குக் கிடமுமா முயிர்கட்
கெல்லாம். (௪௫)

பரிசமாத் திரையின் வாயு வித்தெல்லாஞ் சலி
க்கப் பண்ணி, விரிவுறு பொருள னைத்துந் திரட்டிமே
லோச்சிச் சுற்றிப், பரிவுறு பிராண னாதி பத்தெனப்
பேர்பரித்தே, யரியசித் துயிர்கட் கெல்லா மகம்புற
மாகு மன்றே. (௪௬)

இலகன லுருவ தன்மாத் திரையகத் துற்ப வித்
துப், பலபொரு ளுயிர்க டெக்கப் பக்குவம் பண்ணி
யெல்லா, முலகினு மூன்று யோங்குந் தென்றிசை

யங்கியந்தம், விலகியே சைவம் விந்து வுதரவெவ் வழனு மாமே. (சஎ)

தோற்றிடு மிரதசன்மாத்திரையினிற் றோயம் பின்னைச், சாற்றுசங் கிரக நாளுந் தொழில்சரா சரங்கட்கெல்லாம், போற்றிய போக மாக்கும் பொருந்திய தூளிதன்னை, மாற்றியே திடம தாக்கு மவனியை மன்னி நின்றே. (சஅ)

கந்தமாத் திரையிற் றோன்றிக் கடினமாய்த் தரிக்கும் பூமி, யந்தமாத் திரையி லுள்ள குணமைந்து மவனிக் காகு, மொந்தொந்து குன்றி நான்கு மூன்றிரண்டொன்று நீர் தீ, வந்துவா னிடத்திற் றோன்றுங் குணங்களு மதிக்குங் காலே. (சகூ)

வளியுதி யாது வானின் வன்னியும் வளியிற் றோன்று, தளியுறு கமலந் தானு மனலிடை யெழாது பூவுங், களியுறு சலத்தெ ழாது காண்டலாற் குணங்களேறி, வெளியுமைங் குணத்து வத்தை மேவுமப்படியே தோன்றில். (ருo)

சாற்றிடுந் தனுவே யாகத் தாரணி யாதி பத்து, மூற்றமாங் கரண மாகு மொன்றொடு ராறு முன்னி, லேற்றமுக் குணங்க ளாமென் றெழுமுடற் கருவியாகுந், தோற்றிய வாக்கு நான்குஞ் சுத்தமைந் தெனவுஞ் சூழ்ந்தே. (ருக)

உற்றிடு தத்து வத்தி னுருவமாந் தனுவு மூன்றாய்ப்
பற்றிடுந் தூல சூக்க பரமெனப் பரமஞான
நற்றவ தூலம் பூத நணுகிய வடிவ மாகு
மற்றதட் டகம தாகும் வைந்தவம் பரமா மன்றே. ()

தத்துவ வுருவத் தோடே சார்ந்திடு முயிர்கட் கெல்லாஞ், சுத்தமாம் பரதேகத்திற் சொலித்திடும் வாக்கு நான்கும், நித்தவிஞ் ஞானர்க் கன்றே நிகழ்த்திடுந் தூலஞ் சூக்க, மொத்துறும் பரமு மாகி யொளி திகழ் வைந்தவத்தான். (ருங)

தத்துவ ரூபந் தன்னைச் சற்குரு வருளி னாலே
புத்திசெய் பெரியோர் ஞான பூரண னருளி னாலே
வைத்திடும் பதத்தின்மேலாய் மருவிய போகந் துய்த்து
நித்திய முத்த சுத்த சித்துரு நேர்வ ரன்றே. (ருச)

தத்துவரூபம் முற்றிற்று.

ஆ செய்யுள் - ௧௭௫.

இரண்டாவது

# தத்துவ தரிசனம்.

நாலுகோணம்பிறைமுக் கோணமறு கோணம் விருத்த நணுகியசீர் வடிவுநிறம் பொன்னாதி யாகு, மேலுமதி பதிகண்மல ரயனாதியைவ ரியம்பிடினே சத்திகளும் வாணிமுத லோர்கள், கோலமாங் கலைதானு நிவிர்த்திமுதலாகுங் கூறுநிலநீர் வன்னி வளியண்டங் கட்குச், சீலமுறு மிருதயமுங் கந்தரமு நாவுஞ் சிறந்தபிரு குடிநடுவுஞ் சென்னியுமா மிடமே. (க)

எலும்புதசை நரம்புதோன் மயிரைந்தா மவனியியம்பினறல் மலநீர்சுக் கிலமிரத்த மச்சை, குலங்கெடுக்கும் பசியாசை யுறக்கம்வாட் டங்குலவுமனல் வாயு விலங்க னகுசயனங் கூட, லலங்குறவே யோடிடுதல் விரிந்திடுதல் வான மராகம்வெறுப் பிலச்சை பயநோ யெனவைந்தாகி, யிலங்கியிடு மையைந்தும் பூதத்தின்விரிவா யிருந்துடலைப் புறம்பேயுமியற்றுமெனவறியே, (உ)

கந்தமுதன் மாத்திரைக்குப் பொன்னாதி யுருவங் கருதிலுபத்தா திக்குமிவ் வண்ணங்கழறு, முந்தியமூக் காதிக்கு மிவ்வுருவே மொழிவர் முன்னியிடு மனம்புத்தி யாங்கா ரஞ்சித்த, முந்தியடும் புருடனென மூ

றைபெறு மைந்திற்கு மொளிகொணிறம் வெண்மை சி
வப்புக் கருமை வெண்மை, சந்தித்த கறுப்பு வெண்
மையக ராதிவடிவாஞ் சாற்றுமல ரயன்முதலோர் சா
ருமதி பதிகள். (ங)

நந்தமிலாப் பிரகிருதி சங்கநிறந் திமிர நணுகியிடு
மராகம்வித்தை புகையாகு நாடிற், குந்தநிறங் கலைநி
யதி பொன்னிறமாங் கூறிற் கூடியிடுஞ் சிருட்டிமுதன்
மூன்றுருவாங் கால, மந்தியமா மாயைதா னதிதிமிரா
கார மாடகமாஞ் சுத்தவித்தை திமிரமீச் சரமாஞ்,
சுந்தரநற் படிகநிறஞ் சதாசிவமாம் விந்துத் துவர்தவ
ள காதமெனச் சொல்லிடுமா கமமே. (ச)

வேறு.

எண்ணிய முப்பத் தாறுமியைந்திடுங் கன்மத் தோ
டே, நண்ணிய வணுக்கட் கெல்லா நாயக னருளி ஞ
லே, திண்ணிய மனத்தா னுள்ளே தெரிசனஞ் செய்ப
றத்துங், கண்ணிய பூமி யாதி காணுமா றுரைப்பக்
கேணீ. (ரு)

தத்துவ வத்துவாவைச் சங்கிர கித்துக் கூற, வுத்
தம குணத்தோய் கேட்டி யொராயிர கோடி யண்ட,
மித்தலத் துளவா நீர்க்கு மிம்முறை யனலா திக்கும்,
புத்திசெ யொன்றை யொன்று பொதிந்திடு மிவைபோ
லெல்லாம். (சா)

ஒண்டிறற் கடாகங் கோடி யோசனை யனலமூர்த்
தி, கொண்டபேர் நிலையங் கோடி குரூஉச்சுட ரீரைங்
கோடி, மண்டிய புகையைங் கோடி வலியுறு மநேக
கோடி, திண்டிறல் வீரர் சூழக் காலவங் கீசர் சேர்
வர். (எ)

ஓங்கிய நரக மீதே யுற்றிடு நூற்று நாற்ப
தாங்கதற் கதிக மெண்ணுன் கவற்றுளு மதிக மூன்று
மேங்குறும் வீசி யோடே ரௌரவங் கும்பி பாக
மோங்கினுங் கீழு நள்ளு முறைந்திடு முணருங் காலே.

இந்தமா நரக மூன்று மெவ்வெட்டா மொன்றின்
முப்பான், றிந்திடு நந்நான் காகத் தட்டெண்ணுன் கி
னுக்கு மான, மந்தரத் தோடுங் கோடி யாயிர மொவ்
வொன் றப்பாற், சுந்தரக் கூர்மாண்டந்தான் றொண்
ணூற் றென்பா னிலக்கம்.

அதன்மிசை யுரகர்வாழு மசுர [illegible]க் கதர்களோடு,
மிதமுறு பாத லந்தா னேழென்ப விவற்றின் மீதே,
பதமுறு மாடகர்க்குப் பார்த்திடி னெவ்வொன் றென்
பான், சததச மந்த ராளஞ் சாற்றிடி னூற்றுப் பத்
தாம். (கo)

இருபது நூற்றுப் பத்தி யோசனை பூமி யாக
வொருபதிற் றைந்து கோடி யுற்றிடு முலகத் திங்க

ணரியதோர் மேரு நாப்ப ணமர்ந்துவ ராழி சூழ்ந்து
பரிவுறு தலந்தான் சம்புத் தீவெனப் படுவ தாகும். ()

இலக்கமொன் றிரண்டு நான்கா மிம்முறையேழு
தீவுங், கலக்குறு கடல்க ளேழுங் கனகமால் வரைகள்
ளாதி, தலத்தினின் மேவு நன்னீர்ச் சாகரத் தளவீர்
கோடி, யிலக்கமைம் பத்து மூன்றோ டேயுமா யிரவை
ம்பானும். (கஉ)

ஆடக வுலகம் பத்துக் கோடியா மதனுக் கப்பாற்
பாடுறு வலய மான பருப்பத வகலந் தன்னை
நாடுவ ரயுத மாக நாயிறு முதலா யுள்ளோர்
பீடுறு மொளிய தற்குட் பிறங்கிடும் பேசுங் காலே. ()

ஐயெழு கோடி யேறா றுயிரப் பத்தொன் பானோ,
[illegible] தாய வாயிர மிருளு லோக,
மொய்கட்டற் கோடி யோடே மூவொன்பா னிலக்கங்
கோடி, மையறு கடாக மாக வாய்த்திடு மைம்பான்
கோடி. (கச)

இருநில நான்கு திக்கு மிவ்வள வாகு மீதே
வருமெழு புரவித் தேர்மேன் மருவிய விரவிலோகங்
கருதிலோ ரிலக்க மாகுங் கலைமதி யுலகு மற்றே
திருமலி யுடுக்க ளெல்லாஞ் சேருமண் டலமி லக்கம்.

மதிமகன் புகரே செவ்வாய் வானவர் குரவன் மந்தன்
பதிகளிவ் விரண்டி லக்கம் பழவினைக் குறும்பெறிந்த
வதிகவா லறிஞர்க் கான வாரிட வுலகி லக்கம்
வதியுமோ ரிலக்கத் தப்பான் மற்றைய துருவன்றானம்.

திருவாரு மகலோ கம்பின் சென்தவ லோகங் கட்கே; யிருகோடி யென்ப தோடைந் திலக்கமெண் கோடி யீரா, றுருவாய சத்தியலோக மோங்குமே லதிக மாக, மருவாருங் கமலத் தோற்கு வாய்த்த தெண்ணிரண்டு கோடி. (கஎ)

விண்டுவின் பதந்தான் கோடி மேவிடு மொன்பான் கோடி, யண்டர்நா யகனுர் வாழு மாலயங் கடாகங் கோடி, கண்டிடி லைம்பான் கோடி காசினி முதலா யாக, வுண்டொரு நூறுகோடி யோசனை பிரமாண்டந்தான். (கஅ)

கொடுந்திறற் கொடிற்றுக் கூர்வாய்க் குக்குடத் தண்டமென்ன, விடுஞ்சுடர்க் கனக மேனி மேதினி யண்டஞ் சூழ, வடுந்திற லிந்தி ராதி யையிரு திசையும் வாழ்வர், கடுங்கொலைக் கபாலீ சாதி நூற்றுவர் காவல் பூண்டே. (கக)

திசையினுக் கிறைவ ரானோர் திறலினை யடக்கி யுன்னோர், வசையறு படைக டாங்கி மாதிரக் கா

வல் பூண்டு, தசையுறு கபால மாலை தரித்தரன் சத்தி தன்பா, லிசைவறப் பிரமாண் டத்தை யெழிலொடுந் தரித்து வாழ்வர். (உ0)

சாற்றிய பிரமாண் டத்திற் றசகுண மாவ ரிக்குந், தோற்றுபே ரரவத் தோடு சுழிதிரை சூழ்ந்த நீத்தம், போற்றிய வமிர்தமேனிப் புண்ணிய வருணமூர்த்தி, மாற்றருந் திறலி னோடு மன்னுவ ரதன்மேன் மாதோ. (உக)

ஒளிகொணற் படிக மென்ன வோங்கிய வமரே சாதி, தெளிவுறு நாலி ரண்டுஞ் செறிந்திடு மிந்தி ராதி, களியுறு திசைக ளெட்டுங் கவின்பெறு மதற்கு நாம, மளியுறு மாதிகுய்ய வட்டக மென்பர் மேலோர். உஉ

துதியுறு புனற்கு மேலாய்ச் சூழ்ந்தினி திருக்கும் வன்னி, பதின்மடங் கதின்மேற் செய்ய பாவக மூர்த்திவாழு, மதிகுய்ய வட்டகப்பே ராயரிச் சந்தி ராதி, கதிதரு பயிர வாந்தங் கவினெடெண் டிசையுஞ் சூழ.

தேயுவா வரணத் தும்பர் தெசகுண மாகமேவும், வாயுவா வரண நீல மணிநிற மதனில் வாழ்வர், நாயக வாயு தேவர் நற்றவர் கயையே யர்தி, யாயுணர் குய்யாற் குய்ய வட்டகஞ் சூழ்வ ராங்கே. (உச)

அதன்மிசை வியோமந் தானு மையிரு குணிதஞ் சூழு, மதியினுக் கமேயமாகி வத்திரா பதமே யாதி, யதிகமாம் பவித்தி ரப்பே ரட்டகஞ் சூழ நாளும், வதிவரவ் விடத்தின் மிக்க வானமே வடிவா மீசர். (உரு)

ஐயிரு குணிதம் விண்மே லாங்கார மதன்மேலோங்கு, மெய்துமாத் திரைமனத் தோடிருவகை யிந்தியங்க, ளயமிவ சகலண்ட முன்னுயதா னுடகஞ் சூழ், மையுறு மகந்தை மேனிவானவர தன்மேன் மன்னும்.

சாற்றிய வைலயட் டாகுந் தானமிப் புவியுஞ் சார்ந்து, நீற்றணி திகழு மேனி நிமலனுக் கிடமா மிங்கே, தோற்றிய வுயிர்கள் வாழ்வோ துறந்தவ ருடலந் தன்னை, யாற்றிய பாவ மெல்லா மகன்றுபோ யவற்றின் வாழ்வர். (உஎ)

உன்னிய வாங்கா ரத்தி னெருபது குணித மாகு
மன்னிய புந்தி காவல் வருகதி ரொளிக டப்ப
நன்னலம் புரக்கும் புந்தி நாயகி யதன்மேல் வாழுந்
துன்னிய பைசா சாதி துரிசகல் புவனஞ் சூழ. (உஅ)

புத்தியின் மேலெஞ் ஞான்றும் பொருந்துமுக் குணத்தைக் கற்றோர், பத்தெனுங் குணிதமாகப் பகர்வரிந் திரநீ லம்போ, லுத்தம வரத னம்போ லொளிவிடு

படிகம் போலா, மத்தகு புவன மூன்று ளயனரி யர்
னும் வாழ்வர். (உசு)

சாற்றிய வெண்மூன் ருன் தத்துவஞ் சகலர்க் கீ
யு, மாற்றல்கொண் மூலந் தானு மையிரு குணித மா
கும், வேற்றுமை யின்றி யுள்ளே விளங்குமுக் குண
த்தின் வெய்ய, கூற்றினை யுதைத்த நோன்றாட் குழக
ன் வீற்றிருப்ப னன்றே. (௩௦)

அதன்மிசை புருட னோடு மராகதத் துவந்தானே
யுஞ், சதமடங் கதிக மாகத் தருநிறங் குங்குமம்போ,
லிதமுறு மிச்சா ரூபமா மிராக தேவர், மதமுற' வதி
வர் மீதே மருவிய வித்தை தன்பால். (௩க)

தந்திடு மராகந் தன்னிற் சதகுண மதிக மாகு,
மிந்திர கோப மென்ன வெழில்பெறும் வாமை யாதி;
செந்துவர்க் கனிவா யொண்கட் டிருமலிமாதர் சூ
ழப், பைந்தொடி வித்தை மாது பாங்குற வதனிலோ
ங்கும். (௩உ)

கலையதன் மீதுநூறு கணிதமாங் கருமை செம்மை,
நிலைபெறு வெண்மை பொன்மை நிறநிமிர் புருவச் செ
வ்வா, யுலைவறு கலையென் றேது மொண்டொடி யத
னில் வாழுந், துலையறு மணிபொன் னாரந் துகிறொ
டை சாந்தம் வேந்தே. (௩௩)

சேர்ந்திடு நியதி தானுஞ் சதகுணங் கலையிற் கால
மோர்ந்திடு நியதி மீதே யொருசத குணித மாகச்
சேர்ந்திடு மஞ்சனம்போற் றிகழ்ந்திடு மதனில் வாழ்வ
ரீர்ந்திடு முயிர்கள் வாணா ளெழிறிகழ் காலதேவர். ()

ஆயதோர் காலந் தன்னிற் சதகுண மதிக மாகு
மாயைதே னிழலின் மான வருநிற மரிதா லம்போ
னாயனா ரநந்த தேவர் நனந்தலை யமர்வ ராங்கே
மேயுமிந் திரநீ லம்போ லெழில்பெறு மாயா தேவி. ()

கூறிய மாயை மீதே யாயிரங் குணித மாக
வேறிடுஞ் சுத்த வித்தை யெழிறிகழ் கனகம் போலு
மூறிலாப் பதும ராக மொளிதிகழ் வித்தை யாங்கே
மாறிலா திருக்கு மிக்க மந்திரா திபரும் வாழ்வர். ௩௬

வித்தையி லீச்சு ரந்தான் மேவுமா யிரம டங்காய்ச்
சுத்தமா யொளிருஞ் செய்ய சுடர்விரி கனல்க டுப்ப
வுத்தம குணத்த ரெண்ம ருறைகுவ ராங்க நாதி
சத்தன தாணை யுய்க்குஞ் சத்திசக் கரத்தி னோடும். ()

கூறிய வீச்ச ரத்திற் குணிதமா யிரமென் றோது
மாறில்சா தாக்கி யத்தின் மன்னிடும் படிக மென்ன
வீறுசே ரியோக பீட மேவிடும் விமல மான
ஆறிலாத் தரும மாதி யோங்கிய கால்க ளாக. (௩௮)

ஐயிருநூற தான தளமுடை யம்பு யந்தான்
பொய்யற வதியு மீதே புறவித ழெட்டும் போற்றி
மையறு வித்தை யீசர் வதிவரப் பீட மீதே
மெய்யுறு சித்த யோகர் விழைவொடுஞ் சூழ்வ ராங்கே.

அத்தகு பீட மீதே யம்புயப் பொகுட்டு நாப்பண், டத்துவ மெவையு மாக்குஞ் சதாசிவர் பிரமாங் கங்க, ளொத்துறை விபுவா யோங்கும் வியாபியா யுடனுய் நீங்காச், சத்தியா மனுக்க டாமே தனுவெனத் தரித்து வாழ்வர். (சO)

சத்திசா தாக்கி யத்திற் சாற்றிடி லிலக்க மாகி, யொத்துறு மெவைக்கு மேலா யோங்கொளி யாகு மாங்கே, சுத்தநற் படிக மன்ன சோதியாய் மருவ விந்துக், கொத்துறு கடம்பிற் றேன்றுங் கோளகை வடிவு மென்ன, (சக)

ஓங்கிய சகளத் தோடே நிட்கள முபயாஞ் சூக்க
நீங்கிய கலைய தென்று நிமலவா னந்த மான
தீங்கறு ஞான மேனிச் சிவனுமைந் தாவன் றேரிற்
பாங்குறு சத்தி பேதம் பகரமா தவத்தோய் கேட்டி.

சகளமாஞ் சாந்தி யாதி கலையொடுஞ் சாரிற் சத்தி
யகளமாம் விந்துத் தானே யகிலமும் வியாபித் தோங்கி
லுகளமாஞ் சூக்க மொன்றிற் சுவாலினி யாதி யோடுந்
துகளற வெண்ணி ரண்டாஞ் சுரங்களேற் பின்னர் விந்து,

மன்னிய வதற்கு மீதே மருவியா லம்ப மின்றி
யன்னிய மிலாமை யெங்கு மகலமா யகண்ட மாகித்
தன்னிலை யகன்று மேலாய்த் தாரக மாகி யார்க்கு
முன்னியதோற்றநாசமொழிந்திடுஞ்சிவமென்றுன்னே.

கூறிய வாறு ளுருகுந் தத்துவக் குழாமைந் தேஹோ
டாறுநான் காறும்வித்தை சிவமென வறைவ ரைந்து
மீறிலா வுயிர்கட் கெல்லா வாக்கையு மியற்ற லாலே
மாறில்சீர்ப் பிரேர காண்ட மாமென மதிப்பர் மன்னோ.

அநித்தமாய்ச் சுத்தமாகி யசுபமா யான்மா வன்றிச், செநித்திடும் பொருள்க ளெல்லாம் திரியவே மறைக ளாகி, நனித்துமுன் வினைப்ப லன்க ளுகர்விக்கு மாத லாலே, முனித்தவ வேழும் போச யித்திரு வென்று முன்னே. (சசு)

மானுடத் தேயு மூன்று குணங்களி னுருவ மாகி, யூனமில் புந்தி யாதி கரணமா யுடம்பு மாகி, மானமில் போக முன்னு மாதலான் மாயா பந்த, மானவா ருயிர்கட் கெல்லாம் போக்கிய மறுநான் காமே.

சொற்றருந் தத்து வங்கள் சூழ்ந்துறு மொன்றை யொன்று, மற்றவை கதலித் தண்டின் வடிவென வதியு மாங்கே, யுற்றுண ரோரண் டம்போ லுரைத்திடு மண்ட மெல்லாம், பற்றிய புவனந் தானும் பயின்றிடு மிவைபோ லெல்லாம். (சஅ)

தத்துவங் கலையிற் சாரும் புவனமுந் தத்துவத்தி, லொத்துறு புவனத்தின்க ணுறையுமக் கரங்க டம்மின், மொய்த்துறும் பதம்ப தத்தின் மொழியுமந் திரங்கண் மேவும், பெத்தமா றத்து வாவும் பிறங்கிய வுயிர்கட் கன்றே. (சகூ)

ஈங்கிவை தத்து வத்தின் றெரிசன மிவற்றை யெல்லாந், தீங்கற வுணர்ந்து நாளுஞ் சிந்தனை செய்வோர் கேட்போர், பாங்குறு வித்தை யாதி பதத்தினில் வதிந்தே. யாவு, நீங்கிய பிரள யத்தி னிமலனே ரென்ன வாழ்வர். (ருo)

தத்துவதரிசனம் முற்றிற்று.

ஆ செய்யுள் - உஉரு.

---

மூன்றாவது

## தத்துவசுத்தி.

சிறப்புடைய தத்துவத்தின் சுத்திதன்னைச் செப்புவங்கேள் சித்தாந்தச் செய்தி நோக்கிப், பிறப்பெவற்றி லவற் றெடுக்க மியல்பே யாகும் பிரளயத்து முள்ளவைகள் பின்னமாகி, யிறப்பகன்று மாயையிடத் து

ல்லாமெய்தி யிருந்துமவ ரவர்க்குள்ளதேயு மவரவர்க்கே, மறப்பறவே சிவனாலே சுத்தி செய்ய வல்லவர்கட்கில்லையிவை மதிக்குங்காலே. (க)

வேறு.

பூவற லனல்கால் வானம் பொலிகந்த மிரத ரூபம்
பாவுறு பரிசஞ் சத்த முபத்தமே பாயுப் பாணி
மோவுறு பாணி வாக்கு மூக்கொடு நோக்கு நாக்கு
நீவுறு துவக்குக் கன்ன நினைந்திடு மனமகந்தை. (உ)

புத்தி முக்குணம் பிரதானம் புருடனே யிராகம் வித்தை, யொத்துறு கலைமீ தோங்கு நியதியோர் காலமாயை, சுத்தமாம் வித்தைமா யேச்சுரஞ் சதாசிவமே சத்தி, நித்தமாஞ் சிவமொ டுக்க நிகழ்ந்திடு முறைமையீதால். (ந)

பூமுதற் கந்த மாதி மாத்திரை புக்கொ டுங்கு
மாமம் மாத்திரைகளைந்துங் கன்மவிந் தியங்களைந்து
நாமமார் மனத்தி னோடு ஞானவிந் தியமு நாடிற்
றூமத மிராசதம்பின் றைசதாங் காரஞ் சாரும். (ச)

புந்தியி லகந்தை புந்தி பொருந்து முக் குணத்தைச் சித்தம், வந்துறு மானின் மானு மராகமும் வித்தை தானுங், தந்திடுங்கலை யைச்சாருங் கலையொடு நியதிகால, முந்திய புருடனோடு மாயையி லொடுங்கு மன்றே. (ரு)

வித்தை யீச்சுரத்தை மேவுஞ் சதாசிவத் தடங்கு மீசஞ், சத்தியிற் சதாசிவந்தா னொடுங்கிடுஞ் சத்தி தானு, மொத்துறுஞ் சிவத்தி னெல்லா மொடுங்கிடும் விந்துவின்கண், புத்திசெய் சிருட்டி தானு மீதுபோ ற் புகலு நூலே. (சு)

அடங்கிடு மறுநான் காய தத்துவ மான்மா வுள் ளே, யடங்கிடும் வித்தை நாப்ப ணராகமுன் னுய வாறு, மடங்கிடும் விந்துநாதத் தழகிய வித்தை யாதி, யடங்கிடும் விந்துநாத மகிலமு மாயை தன்னில். (எ)

மண்முதற் சிவமீ ருக மருவுதத் துவம னைத்து, முண்மைமா மாயை மாயை யுள்ளுறைந் துதித்தொ டுங்குந், திண்மையங் குரங்கள் பாரிற் சேர்ந்தெழுந் ததனின் மீள, வண்மையி னொடுங்கு மாபோன் மாப ரன் கருணை யாலே. (அ)

வேறு.

சிவமொடு நற்சத்தி சதாசிவ மீசம் வித்தை செப் பரிய மாயை காலநியதி கலையுற், பவமுறு சீர்வித்தை யிராகம் புருடன் மூலம் பயின்றுவருங் குணம் புத்தி யாங்கார மனத்தோ, டவமறு நற்செவி துவக்குவிழி நாக்கு மூக்கோ டழகிய வாக்குப் பாணி பாத பாயு வுபத்த, முவமையில்சத் தப்பரிச ரூபரச கந்த மோ ங்கிய வான்வளி தீநீர் பாருதிக்கு முறையே. (கூ)

வேறு.

சொற்றருந் தத்து வத்தின் சுத்தியை யுணர்ந்து தூயோ, ருற்றுமேற் பரபோ கந்தா னுண்டெலா மொ டுங்குங் காலம், பற்றுடல்கழிய மேலாம் பரமனைப் போலா னந்தம், பெற்றவர் பெருமை யெம்பாற் பேச லாந் தகைமைத் தாமோ. (க0)

தத்துவசுத்தி முற்றிற்று.

ஆ செய்யுள் - உ௱ரு.

---

நாலாவது

## ஆன்மரூபம்.

அறைகுவங்கேள ணுருப மலின ளுகியறிவுசிறி துறமாயைக் கடங்கி வியா, துறைதருநற் சேதனனாய் வியாபியாகி யுடம்பாதி யியற்றியிடக் கருத்தா வாகிக், குறையறுநற் புற்கலன்பே ரருளி னாலே கொடுவினை போய்ச் சிவமாவ னடைவே முன்னே, முறைதிகழ் பேர் பசுவான்மாப் புருட னாதி மூவகையா மவத்தை யினி மொழியக் கேண்மோ. (க)

வேறு.

தோற்றிய வுருவத் தோடே தொழிலறி விச்சை யின்றி, யேற்றமா முதன்மை யின்றி யெங்குமாய் நித்

த மாகி, மாற்றரும் போக முன்னி மாயையின் வயிற்றுண் மன்னிச், சாற்றிய மலத்தி ஞேடுஞ் சார்ந்திடு முயிர்க ளெல்லாம். (உ)

அந்நிலை யுமர்ந்த வாவிக் கரனருள் கலைவந் தெய்தி, மன்னிய தொழிலுண் டாக்கு மருவிய வித்தையீயுந், தன்னியல் பாகு ஞானஞ் சாத்திய விடயத் திச்சை, யுன்னுவித் திடுமி ராக முறுவிக்குங் குணங்கண் மூலம். (௩)

கழிபெரும் புந்தி யாதி கரணத்தொ டொன்றி யான்மா, வழுவற நியதி தான்செய் வல்வினை நியமித்தோங்கப், பொழுதினை யளிக்கக் காலம் பூத வாக்கையினிற் போகங், குழுவிய கருவி யாலே கொள்ளுமாறுரைப்புக் கேண்மோ. (௪)

பொறிவழி மனம் போந் துற்ற பொருளினைப் புறத்து நோக்கி, யறிவுரு தையஞ் செய்ய வகந்தைவந் தபிமானிக்க, நெறிதரு பொருளைப் புந்தி நிச்சயம் பண்ணு மன்னிற், பிறிவுறு குணங்க ளாலே பெறுஞ்சுக துக்க மோகம். (ரு)

பொருந்திடும் புருடனேல் போகவுன் முகனு யாங்கே, யருந்திட விராக மேன்மே லிச்சித்த பொருளை வித்தை, தரும் பொழுதளிக்கக் காலந் தகைந்திட

நியதி போக, மருந்திடுங் கலையான் மாயை யான்மயங்
கியசீ வான்மா. (சா)

காலந்தா மதம தாகக் கருமங்கள் சமமாங் கால
மாலமுண் டவன்றன் சத்தி யணைந்திடு மாத லாலே
சீலமுண் டாய ஞான தேசிகன் றீக்கை செய்ய
நீல்மா மலமு நீங்கி நிமலனே ராகு மான்மா. (எ)

வேறு.

சொற்றருங்கே வலசகல சுத்த மூன்றிற் றொடக்
குறுமா ருயிரன்றே மூன்று பேத, முற்றிடும்விஞ் ஞா
னகல ரிருவ ராவ ரொருவர்துக டீர்ந்தவர்க ளொருவ
ருள்ளார், மற்றவரு ளிலர்க ளனந் தேச ராதி மந்தி
ரர்க ளொருகோடி மலகன் மங்க, ளுற்றபிர ளயாகல
ரை யுரைப்பக் கேணீயோங்கியதோர் மலபாக முறாத
லாலே. (அ)

சிலரையனந் தேசர்தனு வாதி கூட்டச் சிவனவர்
கட் குற்றதொழின் ஞான மீயக், குலவுபுவ னுதிபரா
ப்ப் பிரமாண் டத்துங் குணத்தினுமேற் புருடனெனு
ங் கலையின் மீது, நிலவுவர்கண் மற்றவர்கள் வினையிற்
கேற்ப நீடுபுரி யட்டகத்தோ டுழல்வ ரெல்லா, வுலகு
தொறு மவனிமுதல் கலையீ ருக வொன்றியதவ் வட்ட
கந்தா னுரைக்குங் காலே. (கூ)

சகலர்திரி மலத்துள்ளார் மலபா கத்தாற் சங்கரன்
றன் கருணையினாற் குரவ னாகி, யகலமலந் தீக்கையினா
லாறு முய வத்துவாத்துடக் கறுக்க வவன்போ லாவ,
ரிகலவினை நரகமொடு சுவர்க்க மெல்லா மெய்திடுவர்
மற்றவர்நற் றவத்தின் மேலோய், புகலுமணு மூவகை
க்குஞ் சகச மாகிப் பொருந்தியதோர் பாசமினிப்
போற்றிக் கேணீ. (௧0)

மலமரிய வினைமாயை மாயேயந் திரோத மன்னிய
தோ ராணவந்தா னென்றாகிச் சத்தி, பலவிதமாய்ச்
செம்பினுறு களிம்பே யென்னப் பசுவெவையு மகலா
து வியாபித் தோங்கு, மூலவுக்கண் மேழ்வற்று ளதிக்
மாக வுரைக்கின்மலம் பசுத்துவமஞ் ஞான மூர்ச்சை,
நலமதிலா வவித்தைதம மாவிருதி மறைப்பு நாடி லிவை
பரியாய நாமமாமே. (௧௧)

வேறு.

சாற்றிய கன்மந் தானு மிருவிதந் தன்மாதன்மந்,
தோற்றுவித் தளித்துப் போக்குந் தொழிலிவைக் கே
து வாகி, யாற்றுநீ ரொழுக்கம் போல வநாதியாய் மல
த்தினாலு, மூற்றமாய்த் தோன்றியென்று முறைந்திடு
மாயை யுள்ளே. (௧௨)

மறப்பறி யாமை யாதி மயக்கமுஞ் செய்யு மாயை,
சிறப்பின்மா யேயஞ் சென்ம வேதுவா யதனி லன்

றே, பிறப்புறு மவனியந்தங் கலைமுதல் பெண்டீர் மக்கள், வெறுப்புறு சாதி யாதி விகற்பமாம் விளம்புங் காலே. (கரு)

திரோதமா மலமென் ெறாதுஞ் சிவசத்தி தன்னைத் தீய, விரோதமா மலங்க ளெல்லா மேவியீ தியற்ற லாலே, நிரோதஞ்செய் தீசன் றன்னை யணுவினை நினை யாவண்ணங், குரோதஞ்செய் காம மாதி கூட்டிடு முயிர்கட் கெல்லாம். (கசு)

ஐவகை மலத்தி னோடு மன்னிய மாகி நீங்கா
மொய்யுறு மான்ம ரூப முழுவது முணர்ந்த மேலோர்
துய்யநற் போகமுற்றுந் துய்த்தெலா மொடுங்குங்கால
மெய்யுறு ஞான னந்த மேவியீற் றிருப்ப ரன்றே. ( )

ஆன்மரூபம் முற்றிற்று.

ஆ செய்யுள் - உருo.

---

ஐந்தாவது

# ஆன்மதரிசனம்.

தெரிசன முரைப்பக் கேணீ செப்பிய வான்மா வின்ற, னெரிகதி ரொளியிற் காந்தத் திலங்கிய வாறு போலப், பரிவொடு குரவன் றேன்றப் பண்டுள ஞானச் செய்தி, துரியமா மவத்தை தன்னிற் றேன்றிடிற் றானுந் தோன்றும். (க)

தத்துவத் தொகையுஞ் சாற்று மணுக்களுந் தன்னுட்டானே, யொத்தறிந் தவையு மாகி யுயிர்த்தன்மை நீங்கி நீங்கா, நித்தனுய்ப் பிறப்பு மில்லா நிமலன் றன் றனே யென்று, புத்திசெய் திடுவன் பஞ்சவவத்தையைப் புகலக் கேணீ. (உ)

சாக்கிர முதலா மைந்துஞ் சாருங்கீழ் நடுவுமேலு, மாக்கிய தத்து வத்தை யணுவினை யமலன் றன்னை, நோக்குவர் மேலே யுள்ள வவத்தையி னெய்ய போகந், தேக்கியு மருண்டு நிற்பர் சேர்ந்துகீழ் நடுவவத்தை. (ங)

ஏழைந்தை யைந்து மூன்றிரண்டொன் றன சாக்கிராதி, வாழ்தலம் புருவங் கண்ட மார்பக நாபி கோசஞ், சூழ்வுறு சொப்ப னத்திற் றுய்த்திடும் விடய

மெல்லா, மாழிய சொப்ப னத்தி லருந்துமா போலத்
தோன்றும். (ச)

மன்னிய சோத்தி ராதி வாக்காதி வாயில் பத்
தும், பின்னமில் விடயம் பத்தும் பிறங்குமுட் கருவி
யைந்துந், துன்னிய வாயுப் பத்துஞ் சூழ்ந்திடுஞ் சா
க்கி ரத்தி, லுன்னிய சொப்பனுதிக் குறுமுறை யுண
ர்ந்து கொள்ளே. (ரு)

தூலமே சூக்கம் பின்னை யதிசூக்கஞ் சூக்க மேலு
மேலுமாஞ் சூக்க மென்றே யியம்புவர் சாக்கி ராதி
சீலமார் பிரத்தியா காரந் தாரணை தியானத் தாலு
மேலதாஞ் சமாதியாலும் விசயமா மீசனுலும். (சு)

வெளியொ டெட்கரணத்தா லு மணுவதன் விடயங்
காண்ட, றெளிவுறு சாக்கிரந்தேர் சுபன முட்கரணத்
துள்ள, களியுறு விருத்தி காண்டல் காயவிந் தியங்க
ணீங்கி, யொளியுறு மவசங் கோட லுரைத்திடிற் சுழு
னை யாமே. (எ)

துரியந்தே கேந்தி யத்தின் றுடக்கறுத் துயிரு ணீ
ங்கா, விரிவுறு ஞானமேவன் மேற்படு சிவோத யந்
தா, னுரியதோர் துரியா தீத முணருமே லவத்தை
யைந்தும், பெருகிடும் விரிக்கி லின்னும் பேசுவங் கே
ட்டி மேலோய். (அ)

தத்துவ மிருபத்தைந்திற் சங்கரன் றன்னைக் காண்ட, லுத்தம சாக்கி ரந்தா னுணர்தல் சொப்பனமே லைந்திற், சுத்ததத் துவத்திற் பார்த்தல் சுழுத்தியா முயிரு ளைக்க, லத்தகு துரிய மீதே யறிந்திட வதீத மாமே. (௯)

இருதயத் துள்ளுங் கண்டத் திடையிலுந் தானு மேலும், பிருகுடி நடுவும் பேசும் பிரமரந் திரத்தும் பேணி, மருவிடுஞ் சாக்கி ராதி யவத்தையின் மாசு நீங்கிக், குருவரு ளாலே தன்னைக் குறித்திடல் கூறக் கேணீ. (௧0)

வேறு.

ஓங்கொளிய வுன்மனையி லதீதந் தன்னி லுற்றிடுமா ருயிர்தனைச்ச ரீர மின்றித், தீங்கறுமெய்ஞ் ஞானவிழி யாலே பார்க்கிற் சிறப்புறுமப் பொழுதுமிகு சாந்த மாகி, நீங்கரிய வாசையறி வெங்கு மாகி நின்மலமாய்ச் சேதனமாய்க் கருத்தா வாகிப், பாங்குடைய பதித்துவந்தான் பசுவுக் குண்டாய்ப் பரமனைப்போ லெங்குமாய்ப் பதியுந் தானே. (௧௧)

செப்பியவிச் சிவத்துவந்தா னுயிர்கட் கெல்லாஞ் சீருணத்தி லடங்கியிடுங் கனகம் போலக், கப்பறவே யுளதன்றே குளிகைநீவக் கனகவுருவாய்க் களிம்பு காணு வாபோ, லொப்பறுசீர்ச் சிவன்குருவாய்ப் பரி

சஞ்செய்ப வுறுமலந்தீர்ந் தவனுவன் பசுவா கான்பின்,
றிப்பியமா மரணித் தீகடையத் தோன்றுஞ் செந்தழ
னெய் யவையாகாத் திறனே போல, (கஉ)

சித்துருவாஞ் சிவனுமியா னெனவே கண்டு தெரு
ண்டவர்கள் பரமுத்தி சேர்ந்து பின்னைத், தத்துவங்க
டமைமுறையே யொடுக்கி நாதன்றனையறியா வுயிர்க
டனைப் பார்றுங் காலத், தொத்துறசச் சிதானந்தத்
தோடே யொன்று யொருவாத திருவோடு முற்று
வாழ்வர், முத்தனுயர் திருவருளா லான்ம சுத்தி மொ
ழிகுவங்கே ளருள்வழியின் முயல்கின் றுயே. (கரு)

ஆன்மதரிசன முற்றிற்று.

ஆ செய்யுள் - உசுரு.

---

ஆறுவது

## ஆ ன் ம சு த் தி.

அறியவோர் நாமமின்றி யாலம்பமின்றிப் பற்
றிச், செறியவோர் தானமின்றிச் சிந்தனை யிறந்து
மேலாய்க், குறியொடு குணமு மில்லா வுருவொடுங்
கூடி யொன்றுய், நெறிதரு மறிவி னுலே நீத்திடுஞ்
செயல்க் ளெல்லாம், (க)

பாசபந் தத்தி ஞலே சீவனும் பாசம் போஞ்
லீசனு முயிரே யாகு மியைந்திடுங் கன்மத் தாலே
நாசமேல் வினைக ளெல்லா நாதனு மலத்தினலே
தேசுதிர் பசுவாம் போனுற் சிவனுமாஞ் சீவன் ருனே.

வினையினுல் விளைந்த வாக்கை மீளவும் வினையை யாக்குந், தினையள வெனினும் யானுய்ச் செய்ததொ ன்றில்லை யென்று, நினையவை யிரண்டு நீங்க நின்மல னருளி னலே, யுனைமல மகலு பாய முத்தம குணத் தோய் கேட்டி. (௩)

இரண்டெழுத் தியம ஞகு மியைந்திடுந் துன்பா லின்பாற், றெருண்டமூ வெழுத்தை நாளுந் தேர்ந்து நீபிரம மென்றே, முரண்டரு மிரண்டை நீக்கி மூன் றினை யுணர்கு வாயே, லரன்றனைப் போன்றெந் நாளு மழிந்திடா தமர்வை கண்டாய். (௪)

எனதெனு முணர்வி னலே யெய்ந்திடுந் துன்பமெ ல்லார், தனதெனு முணர்வை நீத்தோன் சாருவ னி ன்ப முற்றுந், தினமொரு கோழி பூனை சேர்ந்தனன் றுயரம் வீட்டின், முனமுறு மபிமா னந்தான் முடி சும் வியந்தா லுண்டோ. (௫)

பெத்தமு முத்தி தானும் மின்னமோ வுன்னி லெ ன்று, மத்தனீ யெனதென் றன்னு மறிவினு லடை யும் பெத்தஞ், சுத்தனே நினதொன் றின்றிச் சூழறி

வர்கு முத்தி, சித்தமே பெத்த முத்தி செய்திடு முயி
ர்கட் கெல்லாம். (சு)

திருமத்தான் மேல்போங் கீழே சார்ந்திடும் பாவத்
தாலே, குருவருண் ஞான வாளாற் குறைத்துயி ரிர
ண்டுங் காய, மொருவிட மெங்கு மாகி யுற்றிடுஞ் சா
ந்தி தன்னை, மருவுத லான்ம சுத்தி வல்லவர் முத்த
ராவர். (எ)

ஆன்மசுத்தி முற்றிற்று.

ஆ. செய்யுள் - உஎ௦.

---

ஏழாவது

## சிவரூபம்.

செப்புவங்கே டெகடீர்ந்த வறிவின் கேள்வ சிவரூப
முயிர்க டொறுஞ் செறிவ தாகி, யொப்பறுசீர் விந்து
வினு மாயை யுள்ளு மோங்கொளிய தத்துவத்து நீங்
கா தொன்றி, மெய்ப்படுபே ரறிவாகி விலய மாகி வி
யாபகமா யருவுருவ மிரண்டு மின்றித், தப்பறுசீ ரா
னந்த வுருவ மாகித் தருப்பணத்தி னிழல்போலச்
சாரு மெங்கும். (க)

வேறு.

சயம்புமா லரனே யீசன் சதாசிவம் விந்து நாதம், பயந்தருள் சத்திமேலாம் பரசிவ மொடுங்குந் தானம், வியந்திடு நிருத்தா னந்தம் மெய்ம்மைகொள் குருவு ரூப, முயர்ந்திடு வானிற் சாப முருகுநெய்க் கனமும் போலும். (௩)

வன்னியு மொளியும் போல மருவிய வணுக்க டாமே
சென்னியு முகமு மற்றுஞ் சிறந்தபல் லுறுப்பு மாகி
மன்னிய ஞானி யோகி மந்திரி கிரியை யோனு
முன்னியுட்புறத்தும்பூசை யுஞற்றிடவமர்ந்தவன்றே.

மாயைதா னென்பர் சில்லோர் மருவிய விந்துவென்பா
ராயதோர் நாத மென்ப ரதனின் மந்திரமே யென்பர்
தூயதோர் சத்தி யுள்ளே தோன்றிய வுருவமென்பர்
நாயக ரருளாற் கூறு மாகம நயந்தி டாரே. (௪)

எஞ்சலில் யோக யோகிக் கிறைவரா மிறைவற் கென்றும், பஞ்சமந் திரங்க ளாலே பகர்ந்திடுந் தனுவும் பார்க்கிற், றஞ்சமா வரண மின்றிச் சார்ந்திடுஞ் சாத் துவீமென், றஞ்சலின் மறைக ளோடே யாகம மனைத் துங் கூறும். (௫)

சிவனுரு வெவைக்கு மேலாய்ச் செப்புமந் திரங்க ளன்றாய், பவமுறு மலமு மின்றா யநாமய மாகி யெ

ன்று, முவமையா தாரரூப மோங்குமா லம்பமின்றிப்,
பவமுத லகன்றே யெங்கும் பதியுமெட் டயிலம்போல.

படிபுக பூீசா ளுதி பஞ்சமந் திரங்க ளாலே
முடிமுக மிதையங் குய்யமூர்த்தமு மாக்கா முன்னில்
வடிவுறு மந்த ரங்க மந்திர மிருத யாதி
யடிகளிம் மனுவும் பின்ன வணுவென வறிந்தி டாரே.()

உள்ளுறை கரண மாக வுறைவன வரனுக் கென்றே,
தெள்ளிய வாரணீயுஞ் சென்னியு முரோதை தானு,
மொள்ளிய வாக மத்தா லுணர்ந்திடும் பெரியோர்ப்
போற்றிக், கள்ளிய ஞானத் தோற்குக் காணலாந் த
கைமைத் தாகும். (அ)

எங்கணும் பாதம் பாணி யெங்கணும் விழிமு கங்க
ளெங்கணுஞ் சோத்திராதி யேனைய வுறுப்புத் தானு
மெங்கணு மாவ ரித்தே யிருந்திடு மிறைவன் றன்னை
யெங்கணு மாகு முன்னு ளிரண்டற வெண்ணிடாயே.

இப்படிச் சிவரூ பத்தை யிரண்டற வுயிரி னுள்ளே
யொப்பறுகுரவன்கூறவொருமைகொண்மனத்தினாலே
தப்பற வுணர்ந்த மேலோர் தாமவ னுவர் மீளா
ருப்புறு பவ்வ நீரோ டோடைநீ ருற்ற தென்ன. (கoO)

சிவரூப முற்றிற்று.

ஆ செய்யுள்-உஅo.

---

எட்டாவது

## சிவதரிசனம்.

அரனெனுங் கதிரோன் சத்தி யழகுறு விளக்கத்
தாலே, வரமுறு ஞான நோக்கான் மலமுத லகன்ற
வான்மாப், பரனைநற் சத்தி யாதி பலவொடு முயிரிற்
பார்த்த, றிரமுறு தவத்தின் மிக்கோய் சிவதரி சனமீ
தாமே. (க)

ஓங்கிய வுருவ முண்டென் றுரைத்துமுன் னதனை
யின்னுந், தீங்கறத் தெரிசி யென்றே செப்பினை தேவ
தேவ, வாங்கரற் குருவ முண்டோ வவித்தைமுன் ன
டையாதாகிற், றுங்கிடு முருவ மெண்ணிற் சகலரு ம
ணுக்கள் போல. (உ)

புருடனுக் காக யாருப் பொருவிலா னுருவந் தன்னை
மருவின னதுவு நல்ல மந்திர வடிவ மாகுந்
தெருடரு மனுவு மிக்க சிவசம வேதை நம்போன்
மருடரும் வடிவோ சகல மாயினும் மாசற் றேயே. ௩

ஒத்துறு சத்தி தானே யுருவமாய்த் தோன்று மெ
ன்னில், வைத்திடும் பரிணமந்தான் மருவு மானந்த
மாகி, நித்தமா மத்துவாவி னிகழ்ந்திடு மாற தின்றுஞ்
சித்தரே போலவெல்லா வுருவமுஞ் செறிவ னன்றே.

ஆதியு நடுவு மீறு மகன்றெலா மறிவனாகித் [கிற்
றீதில் பூரணனா யுள்ளோன் சிவனென வுளத்து னோக்
சோதிசெய் திடுவன் முன்னைத் துகளற வறிஞர்க்கீச
னோதிய விறைவ னின்றே லுலகினுக் குதயமுண்டோ.

சேதனமல்ல மூலஞ் சிற்றுயிர்க் கறிவொன் றில்லை
யோதிய பரமாணுத்தா னுள்ளதே லதுவு மாங்கே
தீதறு மசேத னத்தாற் செகமிறை யருளை யின்றிக்
கோதற வுதியா தாகுங் குலாலனில் கடங்கள் போல.

துணைவயித் தியனையின்றித் துன்புறு பிணியன்
போன்று, மணைவுறு மிரவியில்லா தழுங்கிடு முலகம்
போன்று, பிணையென வெருண்ட வொண்கட் பிறை
நுத லிறைவி யோடே, யிணையுறு சிவனையின்றி யிட
ருறு முயிர்க ளெல்லாம். (எ)

எவனர னிடத்தே யெல்லா மிருந்திட வெங்கு மா
கும், பவனையப் பொருளனைத்தும் பதிந்திடுமாறு பா
ர்க்கும், மவனுயி ரிடத்தே யீச னமர்ந்திடு மவனு மெ
ன்றுஞ், சிவனிடத் துறையு நீயுஞ் செறிந்தவை யறி
ந்து பாரே. (அ)

கற்றவர் தலைவ வெல்லா ஞானமே யாதி யீரர்க்,
குற்றிடு குணங்க ளாறு முறைசெய வேண்டு மென்
னச், சிற்றுயிர்ப்பாச நாசஞ் செறிந்த தத்துவஞ் சி

ருட்டி, முற்றுமுற் றுணர்தலாலே முழுதுணர் வுடையா னென்பர். (கூ)

ஓங்கிய பொருள்கண் முற்று முடையனு யுலகுக்கெல்லாந், தீங்கறு சார்வுமாகிச் செறிந்திடு சார்வொன் றின்றி, யாங்குறு பொருளனைத்து மடைந்தென்று நிறைத லாலே, பாங்குறு தவத்தோ யீசன் பருதிருத்தனுவ னன்றே. (க0)

அனுதியா யியல்பு மாகி யனைத்துள வுயிர்கட்கென்றே, தனுதுசிற் சத்திதன்னுற் றுணறிந் தியற்ற லாலே, மனுதியி னறிவுக்கெட்டா வரம்பிலா வறிவனுகு, மனுதியை யனுதிபோத னென்றிய லனைத்துங் கூறும்.

சாற்று மூவுலகத் தோடே சராசரஞ் சகமனைத்துந், தோற்றுவித் தளித்துப் போக்குந் தொழிறனக் குரிமையாலே, தேற்றமா மறிவான்மிக்க செழுந்தவத் தேவதேவ, னுற்றல்கொள் சுதந்த ரத்தோ னுமென வறைவர் மேலோர். (கஉ)

நித்தமாய்த் தோற்ற மின்றி நிலைபெற வெவையுந் தானே, சுத்தனு யறிந்தெ வர்க்குஞ் சுகத்தினை யுதவித் தோய்ந்தும், வைத்திடு பொருள்க ளெல்லா மாய்ந்திடா தமர்தலாலே, யத்தனை யலுத்த னென்றே யாகம மனைத்துங் கூறும். (கங)

தனாதியு நடுவு மீறுந் தவிர்ந்துமுன் னொருவ ராகு
முனாதகற் சத்தி யென்று முலப்பிலா வாத லாலே
யெனாதியை யனந்த னென்றே யியம்புவ ரிந்த வாறு
மனாதியா மரனுக் காதி யணுவுக்கா வரணத் தாலே.()

தெரிவுறு திராகு கேது செங்கதிர் மதியி னுள்ளே,
மருவிடக் காணு மாபோன் மற்றவன் றன்னை யுன்னு;
மொருவிடா துன்னு ளேக்கி னுடனந்தையா யவன்
போ லன்றே, பிரிவிலா வறிவா னந்தம் பெறுவைநீ
யுறுதி யாமே. (கரு)

சிவதரிசன முற்றிற்று.

ஆ. செய்வள்-உகரு.

---

ஒன்பதாவது

## சிவயோகம்.

காண்டரு சிவன்போ லுன்னைக் கருதியே யவனே
டொன்ருய்ப், பூண்டுநின் றிடுத லன்றே பொருவறு
சிவயோகந்தா, னீண்டிடீ் தறிவான் மிக்க விருந்தவ வு
ற்சா காதி, மாண்டசா தனங்க ளாறும் வல்லையே
லொல்லை வாய்க்கும். (க)

எங்கணு மடைந்தோன் றேவனேனைய வுயிர்களெல்லாந், தங்குவ னெங்கு மாய தத்துவ ரூபன் றானு, மங்கண னமல நித்த னுமைய னறிவான் மிக்க, செங்கண்மா லயனுங் காணுச் செழுஞ்சுடரோனு நானே.

கலையின்றாய் ஞான் மாகிக் கருதுநிச் சயமா வீயு
நிலையின்றாய் விகற்பமின்றி நிமலமா யேது வோடே
மலைவற மொப்பின் றாகி மருவிய குறியொன் றின்றா
யலைவறு சாந்த மாதி யாகிய பொருளு னன்றே. (ங)

மந்திர வடிவ மான வானவ னுனே யெல்லா, மந்திரங் கடந்தோன் மாண்டு தோன்றிடா வடிவமானேன், முந்திய சராச ரங்கண் முழுவதும் வியாபித் தோங்கு, முந்திடு பொருள் களெல்லா முதித்திடு விப்போன்றானும். (ச)

பவமுத லனேக கோடி யாகிய பவனஞ் சூழுஞ்
சிவமுத லவனி யந்தஞ் செறிந்ததத் துவங்களெல்லா
மவமற வுறையு மென்னு ளாக்குவ னவற்றுள் யானு
முவமையில் சராசரங்கட் குள்ளினும் புறத்துமுற்றே.

சீவனுன் சிவன்வே றாகுஞ் சிறந்தவான் மாவென்றோதும், பாவனை மோகத் தாலே பயில்குவார் சிவத்து வத்தை, மேவிடார் சிவன்வே றாகும் வேறியா னெ

ன்றி டாதே, போவற வவனு னென்று மொற்றுமை யுணர்ந்து நோக்கே. (சா)

தன்னையே சிவனென் றெண்ணித் தானவனாகி வே றற், றன்னவே சமரதந்தா னுதித்திடு முன்னேயொ ன்றிப், பின்னமில் குணங்க ளெல்லாந் தன்னுளும் பி றங்க லாலே, யன்னிய னுயிர்நோக் கென்ன வன்னிய ன் பாலிற் பால்போல். (எ)

இன்னதோர் முறைமை யாலே யெய்திடுஞ் சிவத் து வந்தான், மன்னிய மலத்தி னாலே மாழ்கியுள் ளட ங்க வான்மாத், தன்னையு மறியா தாகுந் தற்பரன் கரு ணை யாலே, யுன்னுவித் திடவுண் ணேக்கி னுடந்தை யாயுறையு மன்றே. (அ)

உற்றிடுஞ் சிவனு னென்றே யொத்திடுஞ் சித்தாந் தத்தின், மற்றைய வதுநா னென்றே மறைமுடி வத னிற் கூறுங், கற்றவ ரிரண்டு மொன்றாய்க் கருதுவர் மலம்போங் காலஞ், சிற்றுயிர்த் தன்மை நீங்கிச் சிவத் துவம் பெறுதலாலே. (கூ)

வேறு.

என்றியம்புஞ் சிவபோகத் தியல்பெல்லா மெழிலு டைய குரவனடி யிறைஞ்சிக் கேட்டு, நின்றவர்க ளிவ் வுலகிற் சீவன்முத்தர் நிறைந்ததவ ரவர் பெருமை நிக

ழ்த்த லாமே, கொன்றிடினு மந்தணர்களாதியோரைக் கூறிடினும் பொய்களவு கொள்ளும் போதுஞ், சென்றிடினும் விடயமெனும் வேலை நாப்பண் சிறந்தரனை யொருபொழுது மறந்திடாரே. (௧0)

சிவயோக முற்றிற்று.

ஆ செய்யுள்-௩0௫.

---

பத்தாவது

# சிவபோகம்.

செப்புவங்கே ளருந்தவ ரிற்சிறந்த மேலோய் சிவ போக முனதுமனந் தெருளுமாற்ற, லொப்பரிய சிவ னிவனோ டொடந்தையாகி யொளிவிடுங் கான்மலபாக விருள்களோடத், தப்பறவே நின்மலமாம் பரமா னந் தந் தான்பிரகா சிக்குமங்கே சமமதாக, யப்பொழு தே யிவனவனோடொன்றி யெங்கு மமர்ந்திடுவ னறிவு தொழி லிச்சையோடும். (௧)

வேறு.

தாதனுனென் றேயென்றுஞ் சாற்றுத லதிக மோக மீதல வதுநா னென்றே யியம்புதல் பிரமை யாகு மோதிடி னனே யெல்லா மெனவுணர்ந் திடுதலுள்ளே தீதறு மயக்க மூன்றுஞ் செறிந்திடா தறிந்திடாயே.()

வேறு.

நித்தியமா மானந்த வுருவத்துள்ளே நீங்காதே தூங்கிடுக நிமலமாகிச், சத்தியமாய்ச் சூனியமாஞ் சுவானுபூதி தான்பிரகாசிக்குமுன்னுட்டரும நீதி, யுத்தமனே யூமனுணர் கனுப்போ லாகி யுணராதே யுணர்தல் சிவபோக மாகு, முத்திநிலை தானு மிகு மோனமான் முடிவிலா நிரதிசய மொழியுங் காலே. (௩)

ஞானவா சாரந் தன்னை நவிலுமா கேட்டி நல்ல
தானமார் கன்மா சாரஞ் சாத்திரா சார மென்னே
யீனமில் சமயா சார மென்செய வுலகா சார
மானவா சாரந் தானே யறுதலா சார மாமே. (௪)

வேறு.

செய்திடுநற் சிவபூசை வணக்க மின்றிச் சிறந்தசெபந் தியானமுதல் செறியானுகி, மையலற நேயத்தே யடங்கி யின்னே மதியாதே யொன்றினையு மதிக்கவீது, வெய்யபசுக் கறக்குமள வாதலம்பு வீழுமளவாதல் விழியிமைப் போதாத, லெய்திடுவ ரேலொருகாற்பாபத்தி லொன்றுயிறந்து பிறந்திருநிலத்து மிருந்திடாரே. (ரு)

வேறு.

அகலமா மாகா யத்தி னமர்ந்ததோர் ஞாறு தித்தன், விகலமா யுதியா னத்த மேவிடான் சந்தி தன்னை, யிகலற வியற்று மாற தெங்ஙன மென்றென் றெ

ண்ணி, முகில்சொரி நீத்த மின்றி முடித்துநீ சந்தி யெல்லாம். (சு)

ஆதியிற் பசுபா வத்தை யகன்றுநற் பதிபா வத்தாற்
கோதற வுறைத ருனே கூடுத லென்று கூறு
மீதலாற்சிவனே டான்மா வியைந்திடு மாறதெங்ஙன்
றீதற வெங்கு மானேன் சேரவே றிடமுண்டோ. (எ)

கற்றையஞ் சடிலக் கோமான் கழலிணை நீழல்சேர்ந்து, முற்றுணர் வாதியாக மொழிதரு குணங்க ளெட்டும், பெற்றரன்றன்னை யுன்னைப் பிறங்கிய வுயிர்க டம்மைத், தெற்றென வுணரு மின்பே சிவபோகந் தெரியுங் காலே. (அ)

தீங்கறு சிவபோ கத்தைத் திளைத்தவர் விழிகளாலும், பாங்குறு மொழிக ளாலும் பதமல ராலுஞ் செய்ய, வோங்கிய கரங்க ளாலு முலகெலாஞ் சிவமா மென்று, லாங்கவர் பெருமை யெம்மா லளக்கலாந் தகைமைத் தாமே. (கூ)

புரையறு வேடமீசன் பொருந்து மாலயங்க ளெல்லா, முரையுணர் விறந்து மேலா மொருவன துருவ மென்றே, தரையினிற் றொழுதுபோற்றித் தற்பரவடிவாய் வாழ்வர், கரையிறந் தகன்ற ஞானக் கடலமு தருந்தி னோரே. (க0)

சிவபோக முற்றிற்று.

ஆக செய்யுள்-௩கரு.

---

## தசகாரியம் முற்றுப்பெற்றது.

# பாட்டுமுதற்குறிப்பகராதி.

## அ.


| பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். |
|---|---|---|---|
| அஞ்ஞதிமல | ௩ | அணிசெய் | ௨௭ |
| அறிதீவ | ௬ | அறிவதாய் | ௩௦ |
| அற்றவர் | ௭ | அணுவினை | ௩௦ |
| அநந்தவாய் | ௭ | அந்தவா | ௩௦ |
| அளவறு | ௭ | அருவுரு | ௩௦ |
| அழிதக | ௯ | அண்டத | ௩௧ |
| அறம்பொரு | ௧௦ | அந்தமோர் | ௩௫ |
| அவன்மனை | ௧௧ | அதன்மிசை | ௪௭ |
| அதனிடை | ௧௩ | அதன்மிசை | ௪௮ |
| அருக்கிய | ௧௬ | அத்தகு | ௫௦ |
| அருந்தி | ௧௯ | அநித்தமா | ௫௧ |
| அந்நா | ௨௦ | அடங்கிடு | ௫௪ |
| அழலிடை | ௨௧ | அறைகுவங் | ௫௫ |
| அருவமா | ௨௧ | அநிலை | ௫௬ |
| அலகிலாப் | ௨௨ | அறியவோர் | ௬௩ |
| அரியதோ | ௨௩ | அரனெனும் | ௬௮ |
| அறிவுறு | ௨௪ | அநாதியாய் | ௭௦ |
| அவன்றனை | ௨௪ | அகலமா | ௭௫ |


## ஆ.


| பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். |
|---|---|---|---|
| ஆசையும் | ௧௨ | ஆதலான் | ௩௪ |
| ஆதலான் | ௧௩ | ஆயதத் | ௩௫ |
| ஆலின்கீ | ௧௭ | ஆடக | ௪௪ |
| ஆடுவன் | ௨௫ | ஆயதோர் | ௪௯ |
| ஆகிலிப்படி | ௨௯ | ஆதியும் | ௬௯ |
| ஆதியாங் | ௩௨ | ஆதியிற் | ௭௬ |

## இ.


| பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். |
|---|---|---|---|
| இலையமுத | உ | இலகன | ஙஅ |
| இருண்மல | ரு | இந்தமா | சங |
| இருவித | அ | இருபது | சங |
| இப்படிப் | கஉ | இலக்கமொன் | சசா |
| இருள்கெடப் | கரு | இருநில | சசா |
| இருவினை | கஎ | இருதயத் | சூஉ |
| இங்கெழுந் | உஎ | இரண்டெழுத் | சூசா |
| இதுதச | ஙக | இப்படி | சூஎ |
| இருவித | ஙசா | இந்நோர் | எங |


## ஈ.


| | |
|---|---|
| ஈங்கிவை | ருஉ |


## உ.


| | | | |
|---|---|---|---|
| உழிதர | க | உண்மையா | ஙக |
| உண்டியொ | கக | உற்றிடு | சா௦ |
| உரியவா | கஎ | உன்னிய | சாஎ |
| உண்டே | கஅ | உள்ளுறை | சூஎ |
| உலகுறு | உஉ | உற்றிடும் | எங |
| உலவிடு | உஉ | | |


## எ.


| | | | |
|---|---|---|---|
| எண்ணரிய | உ | எலும்புதசை | சாக |
| என்றுநற் | அ | எண்ணரிய | சாஉ |
| எவன்குரு | கஉ | எனதெனு | சூசா |
| எறிசுடர் | கச | எஞ்சலில் | சூசூ |
| என்தே | கஅ | எங்கணும் | சூஎ |
| எழிலார் | ககூ | எவனரன் | சூகூ |
| எங்கணு | உஉ | எங்கணும் | எஉ |
| என்றினிய | உஅ | என்றியம் | எங |
| என்றபே | ஙஎ | | |

| பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். |
|---|---|---|---|
| | | **ஏ.** | |
| ஏர்திகழுந் | ரு | ஏழைந் | சுo |
| ஏறியே | ருரு | | |
| | | **ஐ.** | |
| ஐயிரு | ச | ஐயிரு | சஎ |
| ஐயனே | உசு | ஐயிருநா | ருo |
| ஐயெழு | சச | ஐவகை | ருகூ |
| | | **ஒ.** | |
| ஒன்றிவீ | கரு | ஒண்டிறற் | சரு |
| ஒருமல | கசு | ஒளிகொணற் | சசு |
| ஒடுங்குமா | உச | ஒத்துறு | சுஅ |
| | | **ஓ.** | |
| ஓருரும் | உ | ஓய்கொளி | சுஉ |
| ஓங்குழுப் | உசு | ஓங்கிய | சுஅ |
| ஓதுபூ | ருஎ | ஓங்கிய | எo |
| ஓங்கிய | ருo | | |
| | | **க.** | |
| கடுவொடுங் | ரு | கந்தமுதன் | சக |
| கழிபெரும் | எ | கலையதன் | சஅ |
| கறையணற் | கூ | கழிபெரும் | ருசு |
| கந்தநற் | கரு | கற்றையம் | எசு |
| கலைதொறுந் | கஅ | கற்றவர் | சுகூ |
| கந்தமாத் | ருகூ | கலையின்றாய் | எஉ |
| | | **கா.** | |
| காரணை | உரு | காண்டகு | எக |
| காலந்தா | ருஎ | | |
| | | **கி.** | |
| கிரியையாம் | ருஉ | | |

| பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். |
|---|---|---|---|
| | | **கு.** | |
| குறிகொண் | ௧௦ | குறைவற | ௩௨ |
| குற்சித | ௧௨ | | |
| | | **கூ.** | |
| கூறியகலை | ௩௬ | கூறியவீ | ௪௯ |
| கூறியமா | ௪௯ | கூறியவா | ௫௧ |
| | | **கொ.** | |
| கொலைபுரி | ௯ | கொடுந்திறற் | ௪௫ |
| | | **ஞா.** | |
| ஞானமில் | ௧௧ | ஞானவா | ௭௫ |
| ஞானமுங் | ௩௩ | | |
| | | **ச.** | |
| சமையவா | ௯ | சகளமாஞ் | ௫௦ |
| சம்புவே | ௨௬ | சகலர்திரி | ௫௮ |
| சத்திசா | ௫௦ | சயம்புமா | ௬௬ |
| | | **சா.** | |
| சாற்றுமித் | ௬ | சாற்றிய | ௪௮ |
| சாற்றுநா | ௧௨ | சார்ந்திடு | ௪௯ |
| சாதகர்க் | ௩௨ | சாற்றிய | ௫௮ |
| சாற்றிடுங் | ௩௯ | சாக்கிர | ௬௦ |
| சாற்றிய | ௪௬ | சாற்று | ௭௦ |
| சாற்றியவை | ௪௭ | | |
| | | **சி.** | |
| சிறந்தநற் | ௯ | சிவமொடு | ௫௪ |
| சிவமனு | ௨௦ | சில்லரை | ௫௧ |
| சிவசம | ௨௯ | சித்துரு | ௬௩ |
| சிறப்புடைய | ௫௨ | சிவனுரு | ௬௯ |

| பாட்டு. | பக்கம். | சீ. பாட்டு. | பக்கம். |
|---|---|---|---|
| சீராரும் | க | சீவனுன் | எஉ |
| சீரார் | உ௦ | | |

**சு.**

| | | | |
|---|---|---|---|
| சுத்தவெண் | ரு | சுத்தமாம் | உக |
| சுடரொளி | எ | சுத்தமாம் | ௩௩ |

**செ.**

| | | | |
|---|---|---|---|
| செப்புமிக் | க௦ | செப்புவங் | எச |
| செப்பியவிச் | சுஉ | செய்திடு | எரு |
| செப்புவங் | சுரு | | |

**சே.**

| | | | |
|---|---|---|---|
| சேதனமல்ல | சுக | | |

**சொ.**

| | | | |
|---|---|---|---|
| சொற்றருந் | ருக | சொற்றருங் | ருஎ |
| சொற்றருந் | ருரு | | |

**த.**

| | | | |
|---|---|---|---|
| தந்தையா | உஎ | தந்திடு | சஅ |
| தத்துவரூப | உஅ | தத்துவங் | ருஉ |
| தன்னுயிர் | ௩க | தத்துவத் | சு௦ |
| தருமமுன் | ௩சு | தத்துவமி | சுஉ |
| தத்துவவு | ச௦ | தருமத்தால் | சுரு |
| தத்துவரூ | ச௦ | தஞதி | எக |
| தத்துவவ | சஉ | தன்னையே | எ௩ |

**தா.**

| | | | |
|---|---|---|---|
| தாதனுன் | எச | | |

## தி.

| பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். |
|---|---|---|---|
| திருவாருங் | சா | திருவருண் | உங |
| திருமலியு | கச | திருமலி | உசா |
| திருமலியை | கரு | திருவளர் | உசா |
| திருவருளு | ககூ | திருவாரு | சரு |
| திருவருள் | உ௦ | திசையினுக் | சரு |
| திரிமலம் | உக | திரோதமா | ருக |

## தீ.

| | |
|---|---|
| தீங்கறு | எசா |

## து.

| | | | |
|---|---|---|---|
| துன்பமா | கஎ | துதியுறு | சசா |
| துகளறு | உச | துரியங் | சாக |
| துதித்து | உஎ | துணைவை | சாகூ |
| துய்யசீ | ஙசா | | |

## தா.

| | |
|---|---|
| தாலமே | சாக |

## தெ.

| | | | |
|---|---|---|---|
| தென்றிசை | கரு | தெரிசன | சா௦ |
| தெளித்தே | ககூ | தெரிவுறு | எக |

## தே.

| | |
|---|---|
| தேயுவா | சசா |

## தோ.

| | | | |
|---|---|---|---|
| தோற்றும் | ஙஎ | தோற்றிய | ருரு |
| தோற்றிடு | ஙகூ | | |

## ந.

| | | | |
|---|---|---|---|
| நமவெனு | கசா | நந்தமிலாப் | சஉ |
| நறைகமழ் | கசா | | |

### நா.

| பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். |
|---|---|---|---|
| நாமநீ | ரு | நாலுகோ | சக |

### நி.

| | | | |
|---|---|---|---|
| நின்னது | கஅ | நித்தமாய்த் | எ௰ |
| நித்தமா | ஙங | நித்தியமா | எரு |

### ப.

| | | | |
|---|---|---|---|
| பழுதறு | கங | பரிசமாத் | ஙஅ |
| பரிகலந் | உஅ | பவமுத | எஉ |
| படிமுத | ஙசு | | |

### பா.

| | | | |
|---|---|---|---|
| பாசபந்தத்தி | சுச | | |

### பி.

| | | | |
|---|---|---|---|
| பிரிவரு | உக | பின்னதி | ஙரு |

### பு.

| | | | |
|---|---|---|---|
| புந்திமுக் | ஙசு | புந்தியி | ருங |
| புத்தியின் | சஎ | புருடனுக் | சுஅ |
| புத்திமுக் | ருங | புரையறு | எசு |

### பூ.

| | | | |
|---|---|---|---|
| பூந்துணர்ப் | ரு | பூவற | ருங |
| பூமுதற் | உகூ | பூமுதற் | ருங |
| பூதமாத் | ஙஅ | | |

### பெ.

| | | | |
|---|---|---|---|
| பெத்தமு | சுச | | |

### பொ.

| | | | |
|---|---|---|---|
| பொருவரு | உஉ | பொருந்திடும் | ருசு |
| பொறிவழி | ருகூ | | |

### ம.

| | | | |
|---|---|---|---|
| மதிதவழ் | ச | மறிகடற் | கச |
| மமதையாங் | க௦ | மனமுற | உங |

| பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். |
|---|---|---|---|
| | **ம.** | | |
| மனமொழி | ௨௫ | மலமரிய | ௫௮ |
| மதிமகன் | ௪௫ | மறப்பறி | ௫௮ |
| மன்னிய | ௫௧ | மன்னிய | ௬௧ |
| மண்முதற் | ௫௪ | மந்திர | ௭௨ |
| | **மா.** | | |
| மாறில்சீர்ப் | ௨௫ | மானுடத் | ௫௧ |
| மாயையிற் | ௩௪ | மாயைதா | ௬௬ |
| | **மு.** | | |
| முழுதுணர்ந் | ௨௩ | முடிமுதற் | ௨௫ |
| | **மே.** | | |
| மேதினி | ௨௯ | | |
| | **மை.** | | |
| மையறு | ௧௪ | | |
| | **யா.** | | |
| யாதுபா | ௩௨ | யானெனு | ௩௭ |
| | **வ.** | | |
| வன்பெரும் | ௧௭ | வளியுதி | ௩௯ |
| வண்மைவை | ௩௭ | வன்னியு | ௬௬ |
| | **வா.** | | |
| வானமுஞ் | ௩௮ | | |
| | **வி.** | | |
| விற்பொலி | ௬ | விண்டுவின் | ௪௫ |
| விட்டநின் | ௮ | வித்தையி | ௪௯ |
| வித்தையக் | ௩௫ | வித்தை | ௫௪ |
| வித்தையோ | ௩௫ | வினையினல் | ௬௪ |
| | **வெ.** | | |
| வெளியொ | ௬௧ | | |